# திசை
THISAI

திசை 1 | 13-5-1989 சனிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 18


## பேச்சுவார்த்தை அமைச்சர் மட்டத்தில்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை, தற்போது அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற பூர்வாங்க நிலையிலிருந்து அமைச்சர்கள் மட்டத்துக்குத் தாவியுள்ளதாக அறியப்படுகிறது.

அரசாங்கத்தரப்பில் அமைச்சர்கள் ரஞ்சன் விஜேரத்ன, ரணில் விக்கிரமசிங்கா, சிறிசேன குரே, ஏ. சி. எஸ். ஹமீத் ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் திரு அன்ரன் பாலசிங்கம்

(12ஆம் பக்கம் பார்க்க)

### கிராமவாசிகள் — தோட்டத் தொழிலாளர் இணைப்பின் பெயரில்

# வெளிப்பகுதிச் சிங்களவர்கள் மலையகத்தில் குடியேற்றம்?

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில், மலைநாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த விவசாயிகளின் நிலங்கள் வெள்ளையர்களால் பறிக்கப்பட்டு பெருந்தோட்டங்களாக மாற்றப்பட்டமை எல்லோர்க்கும் தெரிந்த வரலாற்று உண்மையே.

இந்த வரலாற்று அநீதியைச் சீர்செய்வதாகக்கூறி, முன்பு இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசு (யூ.எல்.எவ்), தேயிலைத் தோட்டங்களைத் தேசியமயமாக்கியது.

இத் தேசியமயமாக்கலிற்குப் பொறுப்பாகவிருந்த அமைச்சர் (கொப்பேகடுவ –82 இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்றவர்) மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் மலையக வீதிகளிலே பிச்சைக்காரராக அலைவதற்கு வழிவகுத்தவர் என்பதும் வரலாற்றுண்மை.

இன்றோ, மேலோட்டமாக நோக்கும்போது, நிலைமை வேறு.

செல்வாக்குமிக்க அமைச்சராக தொண்டமான் விளங்குகிறார்.

ஆதலால், அவரைமீறி மலையகத் தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாதெனப் பொதுவாக எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கும் போது, இடியொன்று விழுந்திருக்கின்றது.

ஏகாதிபத்தியவாதிகளால் இழைக்கப்பட்ட அநீதியை நிவர்த்தி செய்யும் பொருட்டும், கண்டிய கிராமங்களுக்கும் தோட்டங்களுக்குமிடை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நட்டத்திற்கு யார் பொறுப்பு?

இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் தேயிலைத் தோட்டத்துறை நட்டத்தில் நடைபெறுவதாக உலகவங்கி முதல் கொழும்பிலிருந்து வெளிவரும் சில ஆங்கிலப் பத்திரிகைகள் வரை கூறிவருகின்றன.

தொழிலாளருக்கு வழங்கப்படும் ஊதியமே இதற்கெல்லாம் காரணம் என்றும் சொல்லாமல் சொல்லுகின்றன.

இன்று தொழிலாளருக்கு வாரத்தில் ஆறுநாட்கள் வேலை வழங்கப்படுகிறது. வேலை நாட்களைக் குறைத்தால் உற்பத்திச் செலவுகள் தாமாகவே குறையுமென்பது அவர்கள் கருத்து.

இவ்வாறு இலாபம் காட்டப்பட்டால் எல்லோருக்கும் மகிழ்ச்சிதானே — தொழிலாளர்களைத்தவிர.

## திக்குத் திசை தெரியாத அரசு

இலங்கை அரசாங்கம் எங்கு போகின்றது வருகின்றது என்பது அதற்கே தெரியுமா?

உணவு முத்திரை, ஜனசவிய (வறுமை ஒழிப்புத் திட்டம்) திட்டம் பற்றி பத்திரிகைகளில் வெளிவரும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகளே இச் சந்தேகங்கள் எழுவதற்கான முக்கிய காரணமாகும்.

ஓர் அறிக்கையின்படி, 80 இலட்ச மக்களுக்கு மார்ச் 31, 1990 வரை உணவு முத்திரைகள் கிடைக்கும்.

இதற்குப் பதிலீடான ஜனசவிய பத்திரம் ஏற்கனவே தயாராகவிருந்த போதிலும், இன்னும் விநியோகிக்கப்படவில்லை.

இந்தப் பத்திரங்கள் இவ்வாண்டு ஏப்ரில் 1ஆம் திகதி (சர்வதேச முட்டாள் தினம்) விநியோகிக்கப்படவிருந்தன.

இன்று வரையும் இது நடைபெறவில்லை.

நடைபெறமாட்டாதெனில் மார்ச் 31, 1990 ஆண்டுவரை உணவு முத்திரைகள் ஏன் அச்சிடப்பட்டன?

இந்த மாத (மே மாதம்) இறுதிக்குள் ஜனசவியப் பத்திரங்கள் வழங்கப்பட்டு விடுமென இன்னொரு அதிகாரி தெரிவிக்கின்றார்.

இத்தாமதத்திற்கு அவ்வதிகாரி பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றார். யார் யாருக்கு உதவி அளிக்கப்படவேண்டுமென தீர்மானிப்பதற்கு கிராமங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் இது குறித்து இன்னும் தமது முடிவைத் தெரிவிக்கவில்லை.

நல்ல வேளையாக இவர்கள் முடிவைத் தெரிவிக்கவில்லை.

தெரிவித்திருந்தால், கிராமங்கள் போர்க்களங்களாக மாறியிருக்கும். மாறும்.

உணவு முத்திரைகளைப் பெறும் எல்லோருக்கும் ஜனசவிய பத்திரங்கள் கிடைக்கும் எனச் சொல்வதிற்கில்லை என இந்த அதிகாரி மேலும் சுட்டிக்காட்டியதுடன், வாழ்க்கை வசதிகள் உள்ளவர்களும் உணவு முத்திரைகளைப் பெற்று வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய தடுமாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு.

(11ஆம் பக்கம் பார்க்க)

## மாணவன் சுட்டுக் கொலை

யாழ். பரியோவான் கல்லூரி உயர்தர மாணவன் தி. அகிலன் கடந்த (10. 5. 89) புதன்கிழமை காலை, இனந்தெரியாதோரால் அவரது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)




## ஜே.வி.பி. பேச்சுவார்த்தைக்கு சம்மதம்

ஜே. வி. பி. யினர் இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளதாக வியாழக்கிழமை பி. பி. சி செய்தியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடீரென பேச்சுவார்த்தைக்கு ஜே. வி. பியினர் சம்மதித்ததன் காரணம் அதன் தலைவருக்கு கடும் சுகயீனம் ஏற்பட்டுள்ளதே. அதற்கு வைத்தியம் செய்ய லண்டன் செல்வதற்கு அவருக்கும் அவரோடு செல்லும் குழுவுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

# திசை

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 200/-
அரைவருடம்–ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/–
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


# மகாராணிக்கு கணிதம் கற்பித்த கதை

## ஓர் கட்டுக் கதை

15. 4. 89 இல் வெளிவந்த திசை இதழில் "காலந்தோறும் ஒடுக்கு முறையாளருக்கு முண்டு கொடுத்த தமிழ்த்த லைமைகள்" என்ற தலைப்புடன் 'விடாக்கண்டனல்' எழுதப் பட்ட கட்டுரையை வாசித் தேன். அதில் திரு கி. சுந்தர லிங்கத்தைப் பற்றிய ஒரு வசனம் உண்மைக்குமாறானது. "தனிச்சிங்கள மந்திரிசபையை எவ்வாறு உருவாக்கலாம் என் பதற்கான ஆலோசனையை பரன் ஜயதிலகாவுக்கு வழங்கியவர், இங்கிலாந்தின் மகா ராணியாருக்குக் கணித அறிவு வழங்கியவராக தமிழர்கள் பெருமைப்பட்ட கணித மூளை சி. சுந்தரலிங்கம் என்பவரே தான்." திரு சுந்தரலிங்கம் இங்கிலாந்தின் மகாராணிக்கு கணிதம் கற்பித்தாரென்ற கதை வெறும் கட்டுக்கதை. உண்மையல்ல.

சிலமாதங்களுக்கு முன் இதே கதையை செல்வத்தம்பி மாணிக்கவாசகர் என்பவர், டெயிலி நியூஸ் பத்திரிகையில் திரு சி. சுந்தரலிங்கத்தைப் பற்றி எழுதியிருந்தார். சில நாட்களின் பின் சுந்தரலிங் கத்தாரின் மூத்த மகள் திரு மதி சச்சிதானந்தம் அதை மறுத்து, உண்மையை விளக்கினார். காரணம் தமது தகப் பனைப் பற்றிப் பொய்க்க தைகள் வருவதை, அவர் விரும்பவில்லை.

எலிசபெத் மகாராணியார் 1926 ஆம் ஆண்டில் இங்கி லாந்தில் பிறந்தவர். அந்த வருடத்தில் சி. சுந்தரலிங்கம் 30 வயதுடைய இளைஞராய் கொழும்பிலுள்ள University college என்னும் கல்லூரியின் கணிதப் பேராசிரியராய் கடமையாற்றிக் கொண்டிருந் தார். ராணியார் கல்வி கற்கும் மாணவியாயிருந்த காலத்திலும் சுந்தரலிங்கம் கொழும்பில் பேராசிரியராய்த்தான் இருந்தார். எனவே இளம் ராஜகுமாரிக்கு இவர் கணிதம் கற்பித்தாரென்பது முழுதும் பொய்யான கதை.

வால்பிடிப்பவர்கள், தாம் தலைவர்களென்று சொல்பவர் களைப்பற்றி இப்பேர்ப்பட்ட உண்மைகளுக்கு மாறான கதை களைக் கட்டி விடுவது, வழக்கம். இந்தப் பழக்கம் இந்த நாட்டிற்கு மாத்திரம் உரிய தன்று; எல்லா நாடுகளிலும் இக் கூட்டத்தாரைப் பார்க்கலாம்.

த. சுப்பிரமணியம்
கொழும்பு –6.

## எரிபொருள் விலை ஏற்றம்


எமது அதி உத்தமர் பெற் ரோலின் விலையை அதிகரித் துள்ளார். லீற்றருக்கு ரூ. 2.50 மாத்திரமே அதிகரிக்கப்பட் டுள்ளது எனக் கூறப்படுகிறது. பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தின் நட்டத்தை ஈடுசெய் வதற்காகவே இவ்விலை அதிக ரிப்பை ஏற்படுத்தியிருப்பதா கக் கூறப்படுகிறது.

வறியோரின் வயிற்றில் அடிக்கக் கூடாது என்பதற் காகவே மண்ணெண்ணெயின் விலையை அதிகரிக்கவில்லை என 'தைசாக' அறிவிக்கப்பட்டுள் ளது. வறியோராக விருந்தா லும் சரி, வசதி படைத்தவ ர்களாக விருந்தாலும் சரி — ஒரு மனிதனின் வாழ்க்கையே பெற்றோலில்தான் தங்கியுள் ளது. ஒருவன் வாழ்க்கையை பெற்றோல் பாதிப்பதுபோல மண்ணெண்ணெய் பாதிக் காது.

பெற்றோலின் விலை ஏற்றத் தினால் சாதாரண மனிதனின் வாழ்க்கைச் செலவே அதிகரிக் கின்றது. பெற்றோலின் விலை ஏற்றத்தினால் பஸ் கட்டணங் களும் லொறிக் கட்டணங்க ளும் (Transport Charges) அதி கரிக்கும். இக்கட்டணங்களின் உயர்வு வறியவர்களைப் பாதிக் காதா? இதை அதி உத்தமர் உணர்வாரா? வறியவர்கள் கார் வைத்து ஓடாவிட்டா லும் அவனும் பெற்றோலிலே தங்கியிருக்கிறான். போக்கு வரத்துச் சாதனங்களின் கட் டணம் உயர்கின்ற பொழுது பொருட்களின் விலைகளும் உய ரும். அதனால் வாழ்க்கைச் செலவும் தாமாகவே உயரும்.

பெற்றோலின் விலை ஏற்றத் தால் வறியவர்கள்தான் கூடு தலாகப் பாதிக்கப்படுகிறார் கள். ஆதலினால் அதி உத்த மர் பெற்றோலின் விலை ஏற் றத்தின் தாக்கத்தை உணர் வாரா? பெற்றோலின் விலை யேற்றத்தை அதி உத்தமர் மறுபரிசீலனை செய்வாரா?

S. S. B. சுப்பிரமணியம்
கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில்.



## சேகுவேரா — ஜே. வி. பி.

அண்மைக் காலங்களில் பத்திரிகைகளில் சேகுவேரா கிளர்ச்சியின் (ஜே. வி. பியால் நடாத்தப்பட்ட) 18 ஆவது ஆண்டு நினைவு பற்றி செய்தி கள் வெளியிடப்பட்டன. அதைப் பார்த்த எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. இந்த ஜே.வி.பி கிளர்ச்சிக்கும் (1971 இல் நடத்தப்பட்ட) சேகுவே ராவுக்கும் என்ன தொடர்பு? ஏன் அநியாயமாக சிறந்த ஒரு புரட்சியாளரை இனவாத ஜே. வி. பியுடன் தொடர்பு படுத்துகிறார்கள். 1971 இன் கிளர்ச்சிக்கு சீனாவின் கலாசா ரப் புரட்சியின் தாக்கமே கார ணம். ஆனால் இப்படி மாறித் தொடர்பு படுத்தியதற்கு என்ன காரணம் என்று விளங் கவில்லை.

சேகுவேராவைப் பொறுத்த வரை அவர் ஒரு சிறந்த தீவி ரமான புரட்சியாளர். அவர் தான், தனது குடும்பம், வீடு நாடு என்று வாழாமல் எமது தேசம், எமது மக்கள் என்ற உணர்வுடன் வாழ்ந்தவர். சாதாரண மக்கள் எங்கு, சுரண்டப்பட்டு, ஒடுக்கப்படு கிறார்களோ அங்கெல்லாம் சென்று புரட்சிக்கு ஒத்து ழைக்க விரும்பியவர். பரந்த பார்வை உடையவர். ஆனால் ஜே. வி.பியைப்போல் குறுகிய நோக்கம் கொண்ட இனவாதி அல்ல அவர்.

இந்தச் சிக்கலை எம்போன் றோருக்கு எடுத்துவிட "திசை" யில் இது சம்பந்தமான சிறந்த ஆழ்ந்த கருத்துக்களையும், பரந்த பார்வையையும் கொண்ட கட்டுரை ஒன்று வரவேண்டுமென்று விரும்புகி றேன்; அக்கறை உள்ளவர் கள் நிறைவு செய்வார்கள்.

நன்றி
புரட்சி விரும்பி
திருநெல்வேலி

# 'ராக்கிங்' எதிர்ப்பியக்கம் தேவை

மாணவர்கள் இவ்வளவு கால போராட்டத்தினூடாக வளர்த்தும் நாம் செய்யவேண் டியது என்ன? எமது கடமை என்ன? நாம் நடந்து கொள் வது சரியா? என்பவற்றில் தெளிவில்லாமல் இருக்கிறார் கள். ஆனால் இக்கேள்விக்கான விடைகளனைத்தையும் இதில் கூறவில்லை. கூறவும் முடியாது வருடா வருடம் நடப்பதும், தற்போதும் நடந்து கொண் டிருக்கும் பல்கலைக்கழக ராகிங் பிரச்சினையே இதை எழுத நிர்ப்பந்திக்கிறது. இதில்வரும் கருத்துக்கள் என்னுடையவை யாக இருந்தாலும், சுயநலத் திற்கானவை அல்ல, பொது நலத்திற்கானவை என்பதை அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டும்.

'ராக்கிங்' (இம்சித்தல்) என்பதை பல வருடங்களுக்கு முன்பு மேலைத்தேய நாடுகளில் உள்ள பல்கலைக்கழக பூர்ஷ்வா மாணவர்கள் தங்கள் சுயதிருப் திக்காகவும், மற்றவர்களை துன் பப்படுத்துவதன் மூலம் அவர் கள் அடையும் வேதனையைக் கண்டு தாம் களிகொள்வதற் காகவும், நடத்தினார்கள். ஆனால் 'ராக்கிங்' தொடங் கிய மேலைத்தேய நாடுகளிலே யே இப்பொழுது அது இல்லை. ஆனால் எம் நாடுகளில் இன் றும் ஒரு தொற்று நோயாகத் தொடர்ந்து நடப்பதுதான் வேதனைக்குரியது.

மூத்த மாணவர்கள் (சீனி யர்ஸ்) "ராக்கிங் எமக்கும் புதிதாக வரும் மாணவர்களுக் கும் இடையில் ஒரு புரிந்து ணர்வை வளர்த்துக் கொள்ள வும், புதிய மாணவர்களிடம் உள்ள அச்சத்தை அகற்றவும்" என்பார்கள். புதிய மாணவர் களின் பயத்தை அகற்ற வேண் டியது இன்றியமையாதது தான். புதிய மாணவர்களுடன் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம்தான். ஆனால் அதற்காக நடைமுறை யில் செய்யும் கொலைகள்தான் படு மோசமானவை.

மூத்த மாணவர்கள் ராக் கிங் என்று சொல்லி பண்பா டற்ற முறையில் நடப்பது, வாயில் வந்த வசைமொழிகளை எல்லாம், அருகில் யார் இருப் பது என்ற எண்ணம் இல்லா மல் கொட்டித் தீர்ப்பது, புகைத்தல் பழக்கமில்லாதவர் களைக் கட்டாயப்படுத்தி புகைக் கவைப்பது போன்ற ஈனச் செயலில் ஈடுபடுகிறார்கள். இவை உண்மையில் ஒழுக்கக் கேடானவை. (நான் சொல் லித்தான் தெரிய வேண்டும் என்று இல்லை) இதை மாண வர்கள் உணரலாம். ஆனால் உணர்வதில்லை.

இப்படியான செயல்களை ஒதுக்கித் தள்ள வேண்டும. மக்களின் ஒரு அங்கமே மாண வர்கள், அதனால் மாணவர் களின் செயல்களை அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களின் செயல்களை மக்கள் கவனிக்கிறார்கள். மக் களின் மனதில் பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் சிகரட் குடித்து சீரழிபவர்கள், சாரா யம் குடித்து கூத்தடிப்பவர்கள் பெண்களோடு அரட்டை அடிப்பவர்கள், பெண்களோ படு மோசமானவர்கள் என்ற ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. இந்த அபிப்பிராயத்தை ஒழித் துக்கட்டவேண்டும். அதற்காக எமது செயற்பாடுகளை ஒழுங் காக வரையறுத்துக் கொள்ள வேண்டும், அதன் மூலம் அப் படியான எண்ணங்களைப் பொய்யாக்கலாம்.

"ராக்கிங்கிற்கு" எல்லையே இல்லையென்பார்கள். ஆனால் நாம் ஒரு எல்லையை வரைய றுத்து வைத்துக்கொள்ளலாம்

அப்படி ஒரு எல்லை வகுக்கா மல் விட்டதால்தான் "ராக் கிங்" பல உயிர்களை அநியாய மாகப் பலி கொண்டது. இப் படியான அநியாய உயிர் இழப் புகளை தவிர்ப்பது நன்று; தவிர்க்கவேண்டும்.

*ஈழ பாரதி*

மாணவர்கள் யார்? வருங் காலத்தில் நாட்டைக் காக்கப் போகிறவர்கள். ஒரு சமுதா யத்தை நல்வழியில் நடத்திச் செல்லப்போகிறவர்கள். அதி லும் பல்கலைக்கழக மாணவர் கள் முதன்மையானவர்கள்.

பல்கலைக்கழகம் குடிப்பவர் களின் கூடாரமல்ல. கல்வி மான்களின் கலைக் கூடம். விஞ் ஞானிகளின் பரிசோதனைக் கூடம். நல்ல தலைவர்களை உருவாக்கும் நற்கழகம், ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் அதன் பங்கு அளப்பரியது. அதைக் கட்டிக் காக்க வேண்டியது அவசியம்.

புதிய மாணவர்கள் பற்பல கஷ்டங்களின் மத்தியில் படித்து, ஆர்வமாகக் கற்பதற்கு வருவார்கள். அவர்களுக்கு "ராக்கிங்" தடையாக இருக் கக் கூடாது. அவர்களை அன் போடு அழைத்து, பண்பாகக் கதைத்து அவர்களின் பயத் தையகற்றி, முன்னேறுவதற் கான வழிவகைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மூத்த மாணவர்கள் பண்பானவர்கள் நல்லவர்கள் என்ற அபிப்பிரா யத்தை உண்டாக்கவேண்டும்.

புதிதாக வந்த மாணவர்கள் தாங்கள் பழிவாங்கப்பட்டதற் காக தங்களுக்குப் பின்பு வரு வர்களைப் பழிக்குப்பழி தீர்க்கி றார்கள். இந்தப் பழிவாங்கல் கள் தொடராமல், வருங்கா லங்களில் இல்லாமல் போக வேண்டும். அதற்காகப் பண் பாடற்ற ராக்கிங் எதிர்ப்பு இயக்கம் தொடங்கவேண்டி யது அவசியமானதும், இன்றி யமையாததுமாகும்.

அதன்மூலம் "ராக்கிங்கை" ஒழித்துக் கட்டி நல்ல சிறந்த தலைமுறையை வளர்த்தெடுக் கவேண்டும். இவ் இயக் கத்தை வழிநடத்திச் செல்ல, பேராசிரியர்கள், கல்விமான் கள், விரிவுரையாளர்கள் ஒத் துழைக்க வேண்டியது அவர் கள் கடமையாகும்.

ராக்கிங் எதிர்ப்பு இயக்கத் தின் மூலம் சிறந்த தலை முறை யை வளர்க்க அனைத்து மாண வர்களும் ஒன்றுபடுங்கள்.

உங்களிடையே புரிந்துணர் வை வளருங்கள்.

நல்ல தலைமுறையினராக வளருங்கள்.

நல்ல தலைமுறையினரை வளர்த்தெடுங்கள். □


அமெரிக்கா, ஜேர்மனி,
பிரான்ஸ், கனடா, லண்டன்,
போன்ற நாடுகளுக்கு
செல்ல விரும்புகின்றவர்கள்

பாஃரேன் (Bahrain)
உடனடி வேலைவாய்ப்பு
தொழிலாளர் (கூலியாட் கள்), மேசன், தச்சு வேலை யாளர், டீசல் – பெற்றோல் மெக்கானிக், ஒட்டோ எலக் ரிசன், எலக்ரிசன்ஸ் (வீட்டு வயரிங்) முதலியவற்றிற்கு உடனடியாக ஆட்கள் தேவை
சாப்பாடு, இருப்பிடவசதி இலவசம்

V. T. R. TRAVELS
41, 3rd Cross Street,
JAFFNA
A—10

# சடலங்களிற்கு உபயோகிக்கும் போமலீன் மீன்களிலும்....

புறக்கோட்டை, சென். ஜோண்ஸ் மீன் சந்தையில் மீன் வியாபாரியான எஸ். ஜோர்ஜ் பெரேரா என்பவருக்கு போமலீன் கலந்த மீனை விற்ற குற்றத்திற்காக 12 மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனையும், இரண்டாயிரம் ரூபா அபராதமும் கடந்த மார்ச் மாதம் விதிக்கப்பட்டது.

தண்டனையை விதித்த மாளிஹாகந்த மஜிஸ்திரெட் நீதவான் சோமசிங்க சமரக்கோன் குற்றவாளியை நோக்கி "உமக்கு எதிராக போமலீன் கலந்த மீனை விற்ற குற்றத்திற்காக அல்ல கொலைக் குற்றத்திற்காகத்தான் குற்றம்சாட்டப்பட்டிருக்க வேண்டும்; நீர் அந்த மீனை விற்றதன் மூலம் மனிதர்களை கொலை செய்ய முயன்றுள்ளீர்" எனக் கூறினர்.

கொழும்பு மாநகர சபையின் இரசாயனப் பகுப்பாய்வாளர் திருமதி மேர்சி ஜே. சில்வா சமர்ப்பித்திருந்த அறிக்கையின்படி, அந்த வியாபாரியிடமிருந்து மாதிரியாகப் பெற்ற மீன் துண்டில் பத்து லட்சத்திற்கு 100 சதவீதம் போமலீன் இருந்துள்ளது, இறந்த மனிதச் சடலங்களும் மிருகங்களின் சடலங்களும் கெட்டுப் போகாது காலந்தாழ்த்திப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்காக உபயோகிக்கப்படும் போமலீன் மீன்களில் போட்டு வைத்தும் மீன்கள் கெட்டுப்போகாது சில காலத்திற்கு வைத்துக்கொள்ள முடியும். அந்த மீன்கள் மனித உடம்பிற்கு தீங்கு விளைவிப்பது வேறு விடயமாகும்.

போமலீன் நீரைப் போன்ற ஒரு இரசாயனக் கலவையாகும். அது ஒரு கிருமிநாசினியாகும். அந்தக்கலவை சில மிருக உணவுகளில் மட்டும் நூற்றுக்கு 0.2 சதவீதம் அடங்கியிருக்கின்றன. இதைத் தவிர எந்த மனித உணவிலும் இந்த இரசாயனக் கலவை அடங்கியில்லை. இந்த இரசாயனக் கலவை விஷம் நிறைந்தது என்ற வகையில் சக்திவாய்ந்ததாகும். இதன் காரணமாகத்தான், மனித உபயோகத்திற்கான உணவினைக் காலந்தாழ்த்திப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக இந்த இரசாயனக் கலவையை, உலகில் எந்தவொரு நாடும் உபயோகிப்பதில்லை. அவ்வாறு உபயோகிப்பது சட்டத்திற் தடை செய்யப்பட்டுள்ளது.

போமலீன் கலந்த மீனைஉண்பதன் மூலம் தோலில் பல்வேறு வகையான நோய்களும், உடம்பில் காயங்களும், நிலைத்து நிற்கக்கூடிய வீக்கம் போன்ற நோய்களும் இருமல், தலைவலி, மூச்சு விடுவதில் சிரமம், போன்றவை ஏற்படுவதாக கொழும்புப் பல்கலைக்கழக வைத்திய பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் தேசிய விஷ நிலையப் பணிப்பாளருமான டொக்ரர் ரவீந்திர பெர்னாண்டோ கூறுகிறார்.

மீன் மூலம் போமலீன் உடம்பிற்குள் சென்றவர்களை விட, மீனுக்குள் போமலீனை விடுவதற்காக அடிக்கடி அவற்றைக் கையாள்பவர்கள் பல்வேறு வகையான நோய்களுக்கு இலக்காக இடமுண்டு என, அவர் கூறுகிறார்.

போமலீன் உண்ட எலிகளின் மூக்கில் புற்றுநோய் ஏற்பட்டிருப்பதாகக் கூறும் டொக்ரர் ரவீந்திர பெர்னாண்டோ, மனிதர்களுக்கும் புற்றுநோய் ஏற்படலாம் என்கிறார். எனினும், அதுபற்றி நிரந்தரமானதொரு முடிவு எடுக்கப்படவில்லை.

சந்தையிலுள்ள போமலீன் கலந்த மீனை அடையாளம் கண்டு கொள்வது எப்படி? போமலீன் கலந்த மீனில் இருக்கின்ற விசேட இலட்சணம், அந்த மீனிலிருந்து கடுமையான வாசம் வீசுவதாகும். துண்டாக வெட்டப்பட்ட மீனாக இருந்தால் அவை இருண்ட மஞ்சள் நிறத் தன்மையைக் கொண்டிருக்கும். மீனைப் பிடித்ததும் கட்டியாகவிருக்கும். மீனின் பூவில் கறுப்பு நிறம் சார்ந்த சிகப்புத்தன்மை காணப்படும். அதேபோல் போமலீன் கலந்த மீன்களுக்கு ஈ சுற்றுவது குறைவு. சமைத்த பின்பும் இறுக்கமாகவே காணப்படும். மீனைச் சாப்பிட்டதும் நா கறுக்கும் தன்மையுடையதாகவிருக்கும். எனினும் பழுதான மீன்களைச் சாப்பிட்டாலும் நா கறுக்கும் தன்மை இருப்பதனால், மீனில் போமலீன் கலந்திருக்கின்றதா என்பதை அறிய உதவாது.

மீன்களில் போமலீன் இருக்கின்றதா என்பதை நூற்றுக்கு 100 இரசாயனப் பரிசோதனை மூலமே உறுதிப்படுத்தலாம். சாதாரண பாவனையாளர்களால் இது செய்யமுடியுமானதல்ல. தற்போது இருக்கின்ற இரசாயனப் பரிசோதனை முறைக்கும் பல மணி நேரம் எடுக்கின்றது.

எனவே பாவனையாளர்களுக்கு விலை கொடுத்து வாங்கும் மீனில் போமலீன் இருக்கின்றதா என்பதனைப் பாவனையாளர்களே பரீட்சித்துக்கொள்ளக்கூடிய முறை ஒன்றைத் தமது நிறுவனம் அறிமுகப் படுத்தப் போவதாக, 'நாரு' நிறுவன அத்தியட்சகர் கலாநிதி எஸ். சுபசிங்க தெரிவித்தார். சாதாரண உபகரண ஜோடி ஒன்றின் மூலம் மீனைப் பரீட்சித்துக் கொள்ளக் கூடிய இம்முறை பற்றி; 'நாரு' நிறுவனம் இன்றும் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. இன்னும் சில மாதங்களில் இதனைப் பாவனையாளர்களுக்கு அறிமுகப்படுத்த முடியுமானதாக இருக்கும் என்பதும் 'நாரு' வின் அத்தியட்சகரின் கருத்தாகும். பொதுவாக மீன் பழுதுபடாது பாதுகாப்பாக வைப்பதற்காக ஐஸ் உபயோகப்படுத்தப்படுகின்றது. ஐஸிற்குப் பதிலாக போமலீனை உபயோகிப்பதற்கு மீனவரோ. இடையில் நிற்கும் தரகரோ, வியாபாரியோ முற்பட்டு இருப்பது ஏன்?

ஐஸ் போடுவதனை விடக் குறைந்த செலவு போமலீனுக்கு ஏற்படுவதே, இதற்கு ஒரு காரணமாகும், ஒரு கலன் போமலினின் மொத்த விலை 106 ரூபா மட்டுமாகும். இதன்படி ஒரு லீற்றர் போமலீனின் மொத்த விலை சராசரியாக 23 ரூபா 50 சதமாகும்.

இறந்த சடலமொன்றை இரு நாட்கள் வைத்திருப்பதற்கு எம்பாம் பண்ணுவதற்கு (தைலம்இடுவதற்கு) நீர் கலந்த இரண்டு லீற்றர் போமலீன் போதுமானது. மிகச் சிறு அளவிலான போமலீனை பெருந்தொகையான மீனுக்கு உபயோசிக்கலாம். அறுக்குளா, பாறை போன்ற பெரிய மீன்களுக்கு போமலீன் செலுத்தப்படுவதோடு, சிறிய மீன்கள் போமலீன் கலந்த நீரில் அமிழ்த்தி எடுக்கப்படும்.

ஐஸ் போன்றன்றி போமலீனை உபயோகிப்பது வசதியானது. இரண்டு, மூன்று, லீற்றர் இலகுவில் ஒரே பாத்திரத்தில் போட்டுக் கொண்டு வரலாம். பெருமளவு இடவசதி தேவையில்லை. கொண்டு செல்லும் போது ஐஸ் போன்று உறைந்து விடவும்மாட்டாது.

ஒரு கிலோ ஐஸ் கட்டியின் விலை 40 ரூபாவாகும். மொத்தவிலைப்படி இதன் விலை 35 ரூபாவாகும். நேரடியாக ஐஸ் பண்டகசாலை ஒன்றிலிருந்து எடுத்தாலே இந்த விலையில் ஐஸ் பண்டகசாலைகளிலிருந்து அநேகமாகப் பதிவு செய்யப்பட்ட பாவனையாளர்களுக்கு கோட்டா முறைப்படி ஐஸ் வழங்கப்படுகின்றது. சில்லறை வியாபாரிகள் தொகையாக வாங்கும் பெரிய முதவாளிகளிடமிருந்து ஐஸினை வாங்குவார்கள். புறக்கோட்டை. சென். ஜோண் மீன் சந்தையிலிருந்து மீனை விலைக்கு வாங்கி வெள்ளவத்தைச் சந்தையில் விற்பனை செய்யும் சில்லறை மீன் வியாபாரியான நில்ட்டன் பெர்னாண்டோ என்பவருக்குத் தான் வாங்கும் மீனில் போமலீன் கலந்திருக்கின்றதா என்பது தெரியாது, எனினும், அவர் வாங்கும் மீன் பழுதுபடாதிருப்பதற்காக ஐஸினை வாங்கப் போகிறார். ½ கிலோ ஐஸிற்கு அவர் 25 ரூபா கொடுக்கிறார்.

ஐஸ் விலையும், ஐஸ் தட்டுப்பாடும் போமலீன் உபயோகத்திற்கான காரணிகள் என்றும் கூறலாம். 1985 ஆம் ஆண்டின் போது நாட்டிலிருந்த ஐஸ் பண்டகசாலைகளில் 60 சதவீதமானவை மூடப்பட்டிருந்தன. மூடுவதற்கான பிரதான காரணம் மின்சாரத்திற்கான கூடுதலான செலவாகும். கொழும்பு மாவட்டத்திற்குள் முன்பு ஏழு ஐஸ் பண்டகசாலைகள் இருந்த போதும் இப்போது தனியாருக்குச் சொந்தமான இரு பண்டகசாலைகள் மட்டுமே இயங்குவதாக, கடற்றொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் கூறுகிறார். இந்த ஒரு நிறுவனத்தில் 67 தொன் ஐஸினையே உற்பத்தி செய்யலாம். எனினும், நாளாந்தம் இதன் அரைப்பங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

பெரிய மீன் வியாபாரிகள் இந்தப் பண்டகசாலைகளிலிருந்து தொன் கணக்கில் ஐஸினை வாங்கிக் கொழும்பிற்கு மீனைக் கொண்டு வரும் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னர் போன்ற பகுதிகளுக்கு லொறிகளில் எடுத்துச் செல்வார்கள். போக்குவரத்து செலவுடன் 50 கிலோ ஐஸ் கட்டிக்கான செலவு 60 ரூபாவுக்கு மேலாகும். வெளியூர்களில் கொழும்பினை விட ஐஸீற்குத் தட்டுப்பாடு நிலவுவதனை இது உறுதி செய்கின்றது.

களுத்துறை மாவட்டத்தில் இரு ஐஸ் பண்டகசாலைகளே இருக்கின்றன. இதில் ஒன்று தனியார் துறையினருக்கு உரியது. காலியிலுள்ள ஒரேயொரு ஐஸ் பண்டகசாலையை மீன்பிடிக் கூட்டுத் தாபனம் நடத்துகின்றது. மாத்தறையிலுள்ள மூன்று ஐஸ் பண்டகசாலைகளும் தனியாருக்குரியது. முல்லைத்தீவிலுள்ள ஒரேயொரு ஐஸ் பண்டகசாலையும் தனியாருக்குரியது. யாழ்ப்பாணத்திலுள்ள ஐஸ் பண்டகசாலை இரண்டில் ஒன்றும், சிலாபத்திலுள்ள ஐஸ் பண்டகசாலை இரண்டில் ஒன்றும் தனியார் துறையினருக்குச் சொந்தமானது. 1985 க்கு முன் திருமலையில் ஐந்து ஐஸ் பண்டகசாலைகள் இருந்தன. இதில் ஒன்று மட்டுமே இப்போது செயற்படுகின்றது, போமலீன் கலந்த மீன் சந்தைக்கு வருவதனைத் தடுப்பது எப்படி? போமலீனுக்கான இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பதன் மூலம் இதனைச் செய்யலாமெனக் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திரு. விஜேரத்ன பண்டா கூறுகிறார். அப்போது ஐஸின் விலையை விட போமலீனின் விலை கூடுமென அவர் கூறுகிறார்.

மன்னர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருமலை, கற்பிட்டி, போன்ற தூரப் பகுதிகளில் அமைந்துள்ள மீன் வாடிகளுக்கு நியாய விலையில் ஐஸ் வழங்குவதன் மூலம் போமலீன் உபயோகத்தினைக் குறைக்க முடியுமென விஷ ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவன அறிக்கை சுட்டுக்காட்டுகிறது.

தூரக்கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்க்கு அவர்கள் பிடிக்கும் மீனைப் பழுதுபடாது பாதுகாப்பாக கரைக்குக் கொண்டுவரக்கூடிய, வள்ளங்களிலே பொருத்தக்கூடிய ஐஸ் பெட்டிகளை வழங்குவது போமலீன் கலந்த மீனோ பழுதடைந்த மீனோ சந்தைக்கு வருவதனைத் தடுக்கச் சிறந்த வழியென கொழும்பு மாநகரசபை இரசாயனப் பகுப்பாய்வாளர் திருமதி மேர்சி ஜே. சில்வா கூறுகிறார்.

இவ்வாறு மீன்களுக்குப் போமலீன் போடுவதனை நிறுத்தக்கூடிய முறை பற்றி எவர் எப்படி ஆலோசனை கூறினாலும் ஐஸிற்கு நிலவும் தட்டுப்பாடு ஐஸின் விலையுயர்வு என்பன இந்த இரசாயனப் பொருளின் உபயோகத்திற்கான பிரதான காரணங்களாகும்.

நன்றி:
— சூழல் கொங்கிரஸ் □

## சந்திரனின் விண்தளம்

விண்ணுய்வு. இன்று உலகிற்கு இன்றியமையாத ஒன்ருக இருக்கின்றது, வளர்ந்து வரும் சனத்தொகைக்கேற்ப மனிதன் தன் வாழிடத்தைப் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்காக வேற்றுக்கிரகங்கள் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழ் நிலையில் உள்ளதா என ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு முதற்படியாக சந்திரனில் ஒரு ஆய்வு நிலையம் அமைக்கப்படவேண்டும். ஏனெனில் புவியின் ஈர்ப்பு விசை கனதியான வாயுமண்டலம் அடிக்கடி விண்ணிற்கு செல்ல இடமளிப்பதில்லை. இப்படி அடிக்கடி விண் பயணத்தினை மேற்கொள்வதால் புவியின் வாயுமண்டலமும் அதிகளவில் பாதிப்படையும்,

ஆகவே அவசியமாக சந்திரனில் ஒரு ஆய்வு நிலையம் நிறுவப்படவேண்டும் அப்போது தான் பிறகிரகங்களை ஆய இலகுவாக இருக்கும்.

இதற்கான திட்டத்தில் ஈடுபட அமெரிக்காவின் நாஸா விண்ணுய்வுக்குழு கடந்த சில ஆண்டுகளாக ஆய்வில் ஈடுபட்டுள்ளது,

சந்திரனில் நிரந்தரமாக ஒரு ஆய்வுத்தளத்தை நிறுவவேண்டும் என்ற கருத்தை, விண்வெளி வீராங்கனை 'காலிரைட்' வலியுறுத்தினர்,

இந்த சந்திரனில் விண்ணுய்வுத் தளத்தை அமைப்பதனால் இன்று பெரும்மர்மமாக உள்ள செவ்வாய்க்கிரகத்தின் சூட்சுமங்களை அறிய இலகுவாக இருக்கும். கி. பி. 2000 ஆண்டிற்கிடையில் சந்திரனில் ஆய்வுத்தளம் நிறுவப்படும். அங்கு அமைந்த அடுத்த 10 ஆண்டுகளுக்குள் செவ்வாய்க்கிரகத்திலும் விண்ணுய்வுத்தளம் நிறுவப்படும் என, நாஸா நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்கா ஆய்வு செய்யும் இதே வேளையில், ரஷ்ய விண்ணுய்வுக் குழுவினர் சந்திரனில் விண்தளம் அமைக்கத் தேவையான திட்டங்களை வெளியிட்டுள்ளனர். ரஷ்யக் கலங்கள் சந்திரனில் இருந்து பாறைக்கற்களை எடுத்து வந்தன. அதில் ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர்கள் அக்கற்கள் ரைற்றேனியம், இரும்பு, அலுமினியம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதால் கட்டிடம் அமைக்கச் சிறந்த கொங்கிறீட் ஆக அமையும் என்றனர். அக்கற்களை அரைத்து நீர் சேர்த்தால்

(11ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல்கள் ஒன்றையுமே தீர்க்கவில்லை

## —பாலா தம்பு

இப்பொழுது ஒரு புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது; ஓர் புதிய நாடாளுமன்றம் நிறுவப்பட்டுள்ளது; ஒரு புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் பழைய, அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. எனது நோக்கில், ஜனாதிபதியோ, ஜனாதிபதியும் அரசாங்கமும் இணைந்தோ, இந்த அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க வல்லமையற்றவர்கள்.

மேற்கண்டவாறு, இலங்கை வர்த்தக, கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் (C.M.U.) பொதுச் செயலாளர் பாலா தம்பு 'திசை'க்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

இலங்கையில் இன்று நிலவும் அரசியல் நிலைமை குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் மேற்குறிப்பிட்டவாறு பதிலளித்தார்.

### இன்றைய அரசியல் நிலைமை:

அவர் மேலும் கூறியதாவது இன்று நாடு முழுவதும் காணப்படும் ஓர் அடிப்படைப் பிரச்சினை, அரசியல் வன்முறைப் பிரச்சினையே. இராணுவங்களும் ஏனைய அரச இயந்திரங்களும், ஆயுதம் தாங்கிய அரசியல் குழுக்களும், ஏனைய குழுக்களும் நாளாந்த வன்முறையில், கொலைகளில் ஈடுபட்டு வருகின்றன. தான் ஜனாதிபதியானதும் இக்கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அமைதியை மீண்டும் நிலைநாட்டப் போவதாக பிரேமதாச வாக்குறுதியளித்தார். ஆனால் அந்த வாக்குறுதியை அவரால் காப்பாற்ற முடியவில்லை. அமைதியென்றால் வெறுமனே கொலைகளை நிறுத்திவிடுதல் மட்டுமல்ல. இன்று எதிர்கொள்ள வேண்டிய முக்கிய பிரச்சினை வறுமையை ஒழிப்பதே என்கிறார் பிரேமதாச. இன்றுள்ள சமூக அமைப்பில், வறுமையை ஒழிப்பது என்ற பேச்சு நகைப்பிற்குரியது. ஏனென்றால் வறுமைக்கு வழிவகுக்கும் காரணிகளை பணத்தை எடுத்து விநியோகிப்பதனால் அகற்றிவிட முடியாது. ஜனாதிபதியின் ஜனசவிய (வறுமை ஒழிப்பு) திட்டத்தை கிண்டல் பண்ணி, இப்பொழுது நடைபெறுவது ஜனசவிய அல்ல ஜனசம்ஹாரமே என்று ஜே. வி. பி. சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்து வருகின்றது. இந்த வறுமை ஒழிப்புத் திட்டம் அமைதியை நிலைநாட்ட உதவாது. ஏனென்றால் வறுமை அமைதியை சீர்குலைக்கவில்லை. அமைதியைக் குலைத்தது, யு.என்.பி. அரசாங்கம் மேற்கொண்ட அரசியல் அடக்குமுறைகளும் வேறு அடக்குமுறைகளுமே. இந்த அடக்குமுறைகளும், அடிப்படைப் பிரச்சினைகளை ஜனநாயக முறையில் அணுகத் தவறியதுமே, முதலில் வட - கிழக்கிலும், பின்னர் தெற்கிலும் வன்முறை வெடிப்பதற்கு வழிகோலின.

அவர் தொடர்ந்து கூறியதாவது: அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்தி, பலாத்காரம் மூலம் இப்பிரச்சினைகளை அவர்கள் அணுகினர். பெரிய அளவில் அரசாங்கம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து, பெருந்தொகையானோருக்கு பயிற்சி அளித்து ஆயுதபாணிகளாக்கியது. தாம் எங்களுக்கு பயிற்சி அளித்தார்களோ, அவர்களே தமக்கு எதிராக ஆயுதங்களை திருப்பியுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சர் — பிரேமதாச நியமித்த அமைச்சர் — ரஞ்சன் விஜேரத்தினவே ஒப்புக்கொண்டுள்ளார். இப்படியானோர்க்கு ஆயுதப் பயிற்சி அளித்து, இந்த நிலைமையை முதலில் உருவாக்கியவர் யார்? யு. என். பி, அரசாங்கமே. இப்பொழுது, பிரேமதாச தான் முற்றிலும் வேறுபட்ட கொள்கையைக் கடைப்பிடிப்பதாக கூறிவருகின்றார். ஆனால் அப்படியல்ல. வேறு கொள்கையை அவரால் கடைப்பிடிக்க முடியாது. ஏனென்றால் அவருக்கு உண்மையான ஜனநாயகத் தளம் நாட்டிலேயில்லை. 'அரும்

பேட்டி:
**சொ. சிவபாலன்**

பொட்டி'லே தான் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதான எதிர்க் கட்சி — எஸ். எல். எவ். பி. — அவருக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

வட - கிழக்கில் விரைவில் அமைதி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா என்ற கேள்விக்கு 'இல்லை' என்று பாலா தம்பு பதிலளித்தார்.

### தென் பகுதிச் சம்பவங்கள்:

தெற்கில் நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுக்கு யார் பொறுப்பு என்ற கேள்விக்கு, அவர் அளித்த பதில்: ஜே. வி. பியும், டி. ஜே. வியென அழைக்கப்படும் இயக்கமும் உண்மையில் ஒரே அரசியல் சக்தியின் இரு பகுதிகள். ஒன்று அரசியல் தலைமையை வழங்கி, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட, மற்றது இராணுவ நடவடிக்கைகளிலோ அல்லது பயங்கரவாத நடவடிக்கையிலோ அல்லது இரண்டும் இணைந்த நடவடிக்கைகளிலோ ஈடுபட்டு வருகின்றது. அண்மையில் அவர்கள் பொலிஸ் நிலையங்களைத் தாக்கியுள்ளனர். இதனை இராணுவ வகை நடவடிக்கை எனலாம். ஆனால் தனிப்பட்டவர்களையும் — யு. என். பி. யினர் அரசியல் தலைவர்கள், வேறு ஆட்கள் — அவர்கள் கொன்று வருகின்றனர். இதனைத் தான் பயங்கரவாத நடவடிக்கைகள் என்கிறேன். இரண்டு வகை நடவடிக்கைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஈவிரக்கமற்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்கள் பலரைக் கைது செய்து விட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. இவ்வாறு கைது செய்யப்பட்ட ஒருவர் மொத்தமாக 41 சம்பவங்களில் — சிறிய சம்பவங்கள் உட்பட — தான் சம்பந்தப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதனை என்னால் நம்பமுடியவில்லை.



ஆனால் கொலைகளைச் செய்தவர்களில் அல்லது சம்பந்தப்பட்டிருப்பவர்களில் கணிசமானோர் கைது செய்யப்பட்டிருக்கக் கூடும். ஆயினும் இன்னும் கைது செய்யப்படாமல் எத்தனையோ பேர் உள்ளனர். பெருந்தொகையான ஆயுதங்களும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, இப்பொழுது அரசாங்கத்துக்கு இல்லாத வெகுஜன ஆதரவு கிடைக்கும் வரை, இந்தக் கொலைகள் தொடர்ந்து நடைபெறும் என்று நினைக்கின்றேன். அல்லது அரசாங்கத்துக்குச் செம்மையான தகவல் கிடைத்து, இத்தகைய நடவடிக்கைகளுக்கு பொறுப்பான மையங்களைக் கண்டுபிடித்தால் தான் கொலைகளை நிறுத்தலாம். சும்மா சுற்றிவளைப்புச் செய்து ஆட்களைக் கைது செய்தலும், தேடுதல், அழித்தல் வேட்டைகளில் ஈடுபடுவதாலும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியாது; வன்முறை தொடரும்.

### தொழிலாளி வர்க்கம்:

தொழிலாளி வர்க்கத்தின் இன்றைய நிலைபற்றி கேட்டபோது, அவர் பின்வருமாறு பதிலளித்தார்: வர்க்க நோக்கில் அது இன்று மிகப் பலவீனமுற்ற நிலையிலுள்ளது. தொழிற் சங்க நிலைப்பாட்டிலிருந்து நோக்கினால், தொழிலாள வர்க்கம் பெரும்பாலும் ஒழுங்கமைக்கப்படாதது புலப்படும். பெரிய தொழிற் சங்கங்கள் உள்ளன. ஆனால் பெரும்பாலானவை செயற்திறனற்றவை. தோட்டத்துறையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசே (CWC) பெரிய தொழிற் சங்கம். அதன் தலைமைப்பீடம் பிரேமதாச ஆட்சியுடன் முற்று முழுதாக ஒத்துழைக்கின்றது. இவ்வாறு ஒத்துழைப்பதன் மூலம், தொழிலாள வர்க்க நலன்களுக்கு அவர்களால் பணியாற்ற முடியாது. தோட்டத் துறைக்கு வெளியே, சி. எம். யு. தான் ஓரளவிற்கு செய்திறன் வாய்ந்த தொழிற் சங்கமாக இருக்கலாம். ஆனால் பொது நிலைமை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு நம்மிடம் பலமில்லை. ஏனைய தொழிற் சங்கங்கள் துண்டங்களும, துகள்களுமாயிருக்கின்றன. பழைய இடதுசாரிக் கட்சிகள் தலைமை தாங்கும் தொழிற்சங்கங்களும் ஐக்கிய சோசலிச முன்னணி தலைமை தாங்கும் தொழிற் சங்கங்களும் இன்று ஜே.வி.பியின் 'பயங்கரவாதத்திற்கு (அவர்களின் வார்த்தைகள்) எதிராக போர் தொடுத்துள்ளதால், பலவகையான இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியுள்ளன. யூலை 1980இல் ஏற்பட்ட படுதோல்விக்குப் பின் அவர்களால் அதிக தொழிற் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. வேறு தொழிற் சங்கங்கள் கூட இன்று தொழிற் சங்க நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபட முடியவில்லை. இதுவரை தேர்தல்களில் ஈடுபட்டிருந்தார்கள். தேர்தலுக்குப் பின் சோசலிச முன்னணி எத்தனையோ பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. கொல்வினின் இடத்திற்கு யாரை நியமிப்பது எனத் தீர்மானிக்க முடியாத நிலையிலுள்ளனர். இந்த நிலையில், எப்படி அவர்கள் பயன்முனைப்பான தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும்? யார் தான் அவர்களில் நம்பிக்கை வைப்பார்கள்? கொல்வின் பெரிய வழக்கறிஞர் எனப் பாராட்டும் பத்திரிகைகள், அவருக்கு 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 50,000 வாக்குகள் மட்டுமே கிடைத்தன என்பதைச் சுட்டிக் காட்டுவதில்லை. ஜே. ஆரிற்கு ஏறக்குறைய 30 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. இதிலிருந்து லங்கா சமசமாஜ கட்சியின் வீழ்ச்சி புலனாகின்றது. இன்று முன்பைவிட கொம்யூனிஸ்ற் கட்சி பலவீனமாக இருக்கின்றது. தெற்கில் மாத்தறை, மற்றும் மாவட்டங்களில், ஜே. வி. பியின் நடவடிக்கைகளாலும், அது கட்டவிழ்த்து விட்டிருக்கும் பயங்கரவாதத்தாலும், கொம்யூனிஸ்ற் கட்சி மிகவும் பலவீனமுற்றிருக்கின்றது. பொதுத் தேர்தலில் அவர்களுக்கு 2 வீத வாக்குகள் கூட கிடைக்கவில்லை. எனவே பயன்முனைப்பான தொழிற் சங்க நடவடிக்கைகளையோ, அரசியல் நடவடிக்கைகளையோ அவர்களால் மேற்கொள்ள முடியாது. எனவே தொழிலாள வர்க்கத்திற்கென்று வலிமைமிக்க அரசியல் அமைப்புக்களில்லை தொழிலாளர் கட்சி கட்டி எழுப்பப்பட வேண்டும்' ஆனால் அது இன்னும் கருநிலையிலே உள்ளது. எனவே அரசியல் ரீதியாக தொழிலாள வர்க்கம் குரல் அற்றதாகவே இருக்கின்றது. தொழிலாள வர்க்கத்துக்காக தாம் பேசுவதாகக் கூறிக் கொள்பவர்கள், உண்மையில் தொழிலாள வர்க்கத்தில் தளம் இல்லாதவர்களே. இன்று இதுதான் தொழிலாள வர்க்கத்தின் நிலை. இது தவிர இனமுரண்பாடுகள் தொழிலாள வர்க்கத்தை இனவாரியாக பிளவுறச் செய்துள்ளன. வடபகுதி அமைப்புக்கள் தெற்கிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டு விட்டன அல்லது துண்டிக்கப்பட்டு விட்டன. தொண்டமான் போன்றோரின் செயற்பாடுகளால் தோட்டத் தொழிலாளர் அமைப்புக்கள் ஏனைய அமைப்புக்களிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டு விட்டன. இத்தகைய அம்சத்தை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

### சோவியத் யூனியனில் சீர்திருத்தங்கள்:

இறுதிக் கேள்வியாக

சோவியத் யூனியனில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெரெஸ்ரொய்க்கா (மறுசீரமைப்பு), கிளாஸ் நொஸ்ற் (திறந்த தன்மை) பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்டதற்கு, அவரது பதில்: இந்தச் சின்னத் தீவின் நிலை பற்றிய கேள்வியைவிட, அது பெரிய கேள்வி. முக்கியமாக புரிய வேண்டியது என்னவென்றால், ஸ்ராலின் ஆட்சிக் காலத்திலே காணப்பட்ட சோவியத் யூனியனின் தனிமைப்படுத்தப்பட்ட நிலை மறைந்து வருகின்றது. எனவே இந்த 'திறந்த தன்மை' சோவியத் யூனியனுக்குள் மட்டுமல்ல; வெளி உலகிற்கும் சோவியத் யூனியன் தன்னைத் 'திறந்து' விடுகிறது. அந்த வகையில் உலக பொருளாதார அமைப்பின், முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் செல்வாக்கும் சோவியத் யூனியனில் அதிகரிக்கும். ஆனால் இறுதியிலே சோவியத் தொழிலாள வர்க்கம் மீண்டும் உயிர்ப்புப் பெற்று உலக தொழிலாள வர்க்கத்துடன், முன்பைவிட, செயல்முனைப்பான முறையில் தொடர்பு கொள்ள வாய்ப்பு உருவாகியுள்ளது. இதுவரை காலமும் அது தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வகையில், தொழிலாள வர்க்கத்திற்கு பெரிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன; தொழிலாள வர்க்கத்திற்கு 'திறந்த' வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதல்ல ஆட்சியாளர் நோக்கம். ஆனால் இந்த 'திறந்த' நிலையால், சோவியத் தொழிலாள வர்க்கத்தை இனிமேலும் அதிகார ஆட்சிக்கு உட்படுத்த இயலாது. அதே வேளை, பொருளாதார ரீதியாக முன்பு இருந்தது போல் பாதுகாப்பாகவும் இருக்கமுடியாது. உலக பொருளாதார அமைப்பின் தாக்கத்திற்கு அவர்கள் முகங்கொடுக்கத் தான் வேண்டி வரும். புதிய நிலைமையைச் சமாளிப்பதற்கு சோவியத் தொழிலாள வர்க்கம் போராட்டங்களைத் தொடங்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என நினைக்கின்றேன். அண்மையில், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் நடாத்திய ஓர் வைபவத்தில் சில சோவியத் தொழிற் சங்க தலைவர்களைச் சந்தித்தேன். அவர்களே இந்த நிலையைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். பெரெஸ்ரொய்க்கா கிலாஸ்நொஸ்ற் ஆகியவற்றால், சோவியத் தொழிலாள வர்க்கம் புதிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதனை, அவர்கள் கூறியவற்றிலிருந்து ஊகிக்கமுடிந்தது. அரசியல் ரீதியாக இது ஓர் 'திறந்த' வாய்ப்பு. □

## சிங்கள பௌத்தத் தன்மைக்கு எதிரான

# ஐந்து எதிர்ப்புச் சக்திகள்

*('ராவய' நொவம்பர் இதழில் மடிகே பஞ்ஞாஸீஹ சுவாமியவர்கள் எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள்*

"சிங்கள பௌத்தர் அல்லாதோர் நீண்ட காலமாக இலங்கையில் வாழ்ந்தாலும் இது ஒரு பௌத்த நாடாகும்.. ... மிக நீண்ட வரலாறு கொண்ட சிங்களத் தன்மைக்கும் 2500 வருட வரலாறுள்ள பௌத்தத்தன்மைக்கும் ஊறுவிளைவிக்கின்ற 5 எதிர்ப்புச் சக்திகள் இலங்கை முழுதும் பரவியுள்ளன. அவை யாவன:

1. கத்தோலிக்க எதிர்ப்புச்சக்தி
2. தமிழ் எதிர்ப்புச்சக்தி
3. முஸ்லிம் எதிர்ப்புச்சக்தி
4. அரசியல் எதிர்ப்புச்சக்தி
5. தேர்தல் வாக்கு எதிர்ப்புச் சக்தி

### முஸ்லிம் எதிர்ப்புச் சக்தி;

"முஸ்லிம் ஆக்கிரமிப்பு மிகப் பழைய காலத்திலேயே ஆரம்பித்தது. மத்திய கிழக்கு தொட்டு இந்தியா வரை உள்ள பௌத்த நாடுகள் ஆக்கிரமிக்கப்பட்டன. அதற்கு முன்பு பௌத்த நிலைமை எந்தளவு உயர்ச்சி பெற்றிருந்த தென்றால்-இன்று குழப்ப நிலையிலுள்ள சரான் சராக்கிலிருந்து மாத்திரம் ருவான்வெலிஸாய அத்திவாரக்கல் வைக்கும் உற்சவத்திற்கு ஞானிகள் (ரஹத்) இலட்சக் கணக்கில் விஜயம் செய்தார்கள். இன்று அங்கு பௌத்த அடையாளம் கூட இல்லை. பௌத்தநாடான இந்தோனேசியா யுத்தத்தினுல் ஆக்கிரமிக்கப்படவில்லை. முஸ்லிம் வர்த்தகர்கள் கூட்டமாகச் சென்று இந்தோனேசியப் பெண்களைத் திருமணம் செய்து குடிசனத்தைப் பெருக்கியதன் மூலமே ஆக்கிரமித்தார்கள். இந்த ஆக்கிரமிப்பு இலங்கையிலும் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கிறது. இன்றைய நெருக்கடி நிலையில் முஸ்லிம்கள் சிங்களவர்களோடு நட்புறவோடு வாழ்வது மிகமுக்கியமான காரியமாகும் .....

### தேர்தல் வாக்கு மூலம் ஆக்கிரமிப்பு:

1977 தேர்தலில் முஸ்லிம் வாக்காளர்கள் ஆயிரத்துக்கு மேல் வாழ்கின்ற சிங்களத் தொகுதிகள் 68 இருந்தன. இரண்டு கட்சிகளிலும் இருந்து போட்டி போடுபவர்கள் சிங்களவர்கள். அதிகப்படியான ஒரு வாக்காலும் வெற்றிபெற முடியும். முஸ்லிம் பிரமுகர்கள் பிரதான அரசியற் கட்சிகள் இரண்டிலும் தொடர்பு வைத்திருப்பார்கள். தேர்தல் வெற்றியின் பின்பு சிங்களவர்கள் தூற்றிக் கொள்வர், அடித்துக் கொள்வர், வீடுகளுக்குத் தீமூட்டி சாகடிப்பர். முஸ்லிம் பிரமுகர்களோ வெற்றி பெற்றவருக்குத் துதி பாடிக் கொண்டு அவரை நாடிச் செல்வார்கள். வாக்குறுதிகளைத் தாமதமின்றி நிறைவேற்றிக் கொள்வர். சிங்களவர்களோ பிறகும் தூற்றிக் கொள்வர், அடித்துக் கொள்வர், இதுவே தேர்தல் வாக்கு ஆக்கிரமிப்பாகும்.

சிங்களவர்கள் இந்த 5 எதிர்ப்புச் சக்திகளாலும் -ஆக்ரமிப்புகளாலும் நீண்ட காலந்தொட்டு மிதியுண்டு அமுங்கிக் கிடக்கிறுர்கள். இன்னும் சில காலம் செல்லும் போது தாக்குண்டு நசுங்கி அழிந்து போகமுடியும். அவ்வாறு நடந்தால் இலங்கையில் சாசனமும் இல்லாதொழிந்து விடும்."

## பௌத்த பிக்குமார்

# குல பேதத்தை ஒழித்து

# ஐக்கியத்தைக் காட்டத் தயாரா?

ராவய நவம்பர் இதழில் சிங்கள பௌத்தத் தன்மைக்கு எதிராக ஐந்து எதிர்ப்புச் சக்திகள் செயல்படுவதாக சங். மடிகே பஞ்ஞாஸீஹ சுவாமிகள் குறிப்பிட்டிருந்தார். அவையாவன

1. கத்தோலிக்க எதிர்ப்புச் சக்தி
2. தமிழ் எதிர்ப்புச்சக்தி
3. முஸ்லிம் எதிர்ப்புச்சக்தி
4. அரசியல் எதிர்ப்புச்சக்தி·
5. (தேர்தல்) வாக்கு எதிர்ப்புச்சக்தி

மடிகே சுவாமியவர்கள் இந்தப்பட்டியலில் உட்படுத்தாத மற்றுமொரு எதிர்ப்புச் சக்தியுமுண்டு. அதுவே தற்போதைய சில புத்த பிக்குமார்கள். இன்றைய பிக்குமார் புத்த பெருமானின் எதிரிகளென்று பேராசிரியர் டப்ளியூ. எஸ். கருணுரத்ன அவர்கள் ராவய இதழில் எழுதிய கட்டுரையைப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பௌத்த தர்மத்தின் உயரிய கொள்கைகளுக்கும் புத்த பெருமானின் முன்மாதிரியான வாழ்க்கை முறைக்கும் முரணுகச் செயற்படுகின்ற பிக்குமார்கள் பற்றி அவர் எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு மடிகே சுவாமியவர்கள் கூறும் பதில்தான் என்ன?

பழைய பௌத்த நாடுகள் பலவும் இல்லாது போகக்காரணம் அக்காலத்தில் வாழ்ந்த குருமார் தர்மத்தின் வேஷத்தில் பிற்போக்குவாதத்துக்கு சேவகம் புரிந்தமையே, மறுபுறம் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் ஒரு நாடு ஒரே விதத்தில் இயங்குவதில்லை. புத்த பெருமான் அவர்களின் கூற்றுப்படி எல்லாச் செயற்பாட்டு முறைகளும் அநித்தியமானவையே. எதுவும் ஒரே விதத்தில் இயங்குவதில்லை. எனவே உலக வரலாறும் நாளுக்கு நாள் மாற்றமடைந்து ஒன்றேடொன்று மோதி முன்னேறிச் செல்லும். இது எந்தவொருவராலும் மாற்ற முடியாத அகிலாண்ட உண்மையாகும். எனவே மாறியவாறே முன்னேறிச் செல்லும் சமூகத்தின் அங்கத்தவர்களது ஆன்மீக வளர்ச்சியை ஒழுங்கமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் எல்லா மதங்களினதும் அவற்றின் தலைவர்களினதும் கடமையாகும்.

இத்தகைய மாற்றங்கள் தவறுனவையென்று நினைப்பதாயின் அதனைத்தடுத்து பழைய நிலைமைக்கே உலகத்தைக் கொண்டு வருவதற்கு மடிகே பஞ்ஞாஸீஹ சுவாமியவர்கள் தலைமையில் அமைப்பொன்றை முடியுமாயின் சர்வதேச மட்டத்தில் உருவாக்குவார்களாக. அப்போது இன்று அவுஸ்திரேலியர்கள் பின்பற்றுகின்ற கிறிஸ்தவ மதம் தேசிய மதம் அல்லாதபடியால் அங்கிருக்கும் கிறிஸ்தவர்களை தமது மதம் உருவான இடத்தை நோக்கித் துரத்திவிட முடியும். இத்தகைய கைங்கரியத்தைச் செய்து கொண்டுபோகும்போது அதற்கு இலங்கையும் உட்பட வேண்டியிருக்கும். காரணம், பௌத்த மதம் இலங்கையில் உருவாகவில்லை என்பதே. இந்த அடிப்படையில் பார்க்கும் போது பர்மா, வியட்னும், தாய்லந்து, லாவோஸ், கம்போடியா போன்ற நாடுகளையும் இச்செயல் பாதிக்கும். பௌத்தம் இந்தியாவில் உருவானபடியால் அந்நாட்டில் மாத்திரமே அம்மதம் செயல்பட வேண்டி ஏற்படும்.

மேற்காட்டிய தேசிய மதத்தைத் தேடும் கைங்கரியத்தைச் சர்வதேச மட்டத்தில் நமது சுவாமியவர்களால் செய்ய முடியுமாயின் நாமும் அதனை மதித்துப் போற்றுவோம்.

ஸ்ரீலங்காவில் சிங்கள பௌத்தத் தன்மை வீழ்ச்சியடைவதற்கான காரணங்களை தேடிச் சிரமப்படும் மடிகே சுவாமியவர்களுக்கு நாம் சொல்வது: அத்தகைய தர்மிஷ்ட பணியை இனவாத உணர்வு இன்றியே செய்ய முடியும். இந்நாட்டில் நடைபெறுகின்ற அரசியல், பொருளாதார, சமூக அடிப்படைகளைக் கணக்கிலெடுக்காமல் இதற்கான காரணங்களைத் தேடமுடியாது. பௌத்த மதத்தின் சாரமான மனிதாபிமானத்தைப் பின்னணியாகக் கொண்ட அமைப்பொன்றின் வாயிலாக செய்வதன் மூலமே இலங்கையில் சிங்கள பௌத்த தன்மையை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும். அப்போது சுவாமியவர்கள் எதிர்ப்புச் சக்திகளென்று குறிப்பிடும் பிரிவினர் கூட நண்பர்களாக அவருக்கு ஒத்துழைப்புத் தர முன் வருவார்கள்.

மடிகே பஞ்ஞஸீஹ சுவாமியவர்கள் கண்டுபிடித்துள்ள அபூர்வ எதிர்ப்புச்சக்திகளுள் முஸ்லிம்களும் ஒன்ருகும். எவ்வித ஆக்ரமிப்பும் இன்றி இந்தோனேசிய மக்கள் இஸ்லாத்தைத் தழுவியதாக அவர் குறிப்பிடுகிருர். அங்கு சென்ற வர்த்தகர்கள் அந்நாட்டுப் பெண்களை மணமுடித்து குடிசனத்தைப் பெருக்கியதன் காரணமாகவே அந்நாட்டில் இஸ்லாம் பரவியதாக அவர் குறிப்பிடுகிருர். வர்த்தகர்கள் நாடுகளுக்குச் சென்று அந்நாட்டவர்களை மணமுடிப்பது எந்நாட்டிலும் நிகழ்கின்ற சாதாரண விடயமாகும். எனவே இந்தோனேசியா முஸ்லிம் நாடாவதற்கு அவர் காட்டும் காரணம் பகுத்தறிவுக்குப் பொருத்தமானதல்ல.

இன்று சோஷலிஸ நாடுகளாக மாறியிருக்கும் ருஷ்யா உட்பட கிழக்கைரோப்பிய நாடுகள் மாக்ஸிஸத்தைத் தழுவிக்கொண்டதற்காக அதனையும் ஆக்கிரமிப்பு என்று சுவாமியவர்கள் வாதிடுவாரோ? எமது கண்ணேட்டத்தின்படி அன்றைய நிலப்பிரபுத்துவ சமூகத்தில் கத்தோலிக்க திருச்சபையினதும் பிரபுக்களினதும் ஆக்ரமிப்புகள் காரணமாக மிதிபட்டுக்கிடந்த மக்கள் அந்த சமூக ஒடுக்குதல்களிலிருந்து விடுதலை பெறவே மாக்ஸ்வாதத்தை தழுவினுர்கள். இந்தக்கருத்து இன்று மாக்ஸிய நாடாக இருக்கும் அல்பேனியாவுக்கும் பொருந்தலாம். இஸ்லாம் சமயத்தின் வேடத்தில் அந்நாட்டுக் குருமார் (உண்மையிலேயே குருமார் என்ற பிரிவு இஸ்லாத்திலே கிடையாது) மக்களைச் சுரண்டிக் கொழுக்க மதத்தைப் பாவித்தமை இம்மாற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

இலங்கையின் தேசிய மதம் அல்லாத பௌத்த மதத்தை சிங்கள இனத்துக்கு மாத்திரம் எல்லைப்படுத்த முயல்கின்ற சுவாமியவர்களிடம் நாம் கேட்கிறேம்! "புத்தபெருமான் ஒரு சிங்கள இனத்தவரா?" என்று. இந்த மதம் இந்தியாவிலிருந்து வந்தபடியால் இதுகூட ஒரு வித ஆக்ரமிப்பே என்று இங்குவாழும் குவேனியின் சந்ததியினர் குற்றம் சாட்டினுல் அதனை ஏற்றுக் கொள்ள மடிகே சுவாமியவர்கள் தயார்தானு?

இலங்கையில் சிங்கள பௌத்தத்தன்மை வீழ்ச்சியடைவதற்கு ஒருகாரணமான எதிர்ப்புச் சக்தியாக இன்றைய பௌத்த பிக்குகளை முன்பு நாம் குறிப்பிட்டோம்.

குலபேதத்தை வெறுத்த புத்தபெருமானின் தர்மத்தைப் பிரசாரம் செய்யவும் சாசனத்தைப் பாதுகாக்கவும் முன்வந்துள்ள மடிகே சுவாமி போன்றவர்கள் அதற்கான ஊடகமாகப் பயன்படுத்துவது

### மடிகே சுவாமிக்கு பதில்

குலபேதத்தை அடிப்படையாகக் கொண்ட நிகாயாக்களையல்லவா? மடிகே பஞ்ஞாஸீஹ தேரோ அவர்களைத் தலைவராகக் கொண்ட அமரபுர மஹா சங்க சபாவிலே குலங்களின் பேரால் எத்தனை நிகாயாக்கள் உண்டு? பட்டபொல அனோமதஸ்ஸி தேரர் கல்யாணி நிகாயாவுக்கும், தலல்லே தம்மானந்த ஹிமியவர்கள் மற்றுமொரு நிகாயாவுக்கும் தலைவர்களாய் இருந்து கொண்டு ஒற்றுமை பற்றி ஆரவாரம் செய்வதில் ஏதும் பயன் உண்டா? உங்களுடைய அமரபுர மஹா சங்க சபாவிலும் கூட மலைநாட்டு அமரபுர நிகாய என்ஞெரு பிரிவு உண்டல்லவா? சியம் நிகாயவில் அஸ்கிரி உபபிரிவில் பிக்கு ஆவதற்கு ஒருவரது தாய் தகப்பன் இருவரும் கொவிகம குலத்தவராய் இருப்பது கட்டாயம் அல்லவா?

இவ்வாறு நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் சாபக்கேடான குலபேதங்கள் அனைத்தையும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற உங்களைப் போன்ருேர், மாறிச் செல்லும் யுகத்துக்கும் சமூகத் தேவைகளுக்கும ஏற்ற விதத்தில் பௌத்தத்தை விளக்குவதற்குத் தயங்குவதாயின் -பழைய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பையே பாதுகாப்பதற்காக பௌத்த மதத்தை பயன்படுத்த முற்படுவதாயின்-இன்றைய . இளைஞர் பரம்பரை அத்தகைய பிற்போக்கு வாதத்துக்கு சேவகம் புரிகின்ற தத்துவமொன்றை ஒருபோதும் பின்பற்ற மாட்டார்கள். இந்தக் கூற்று இஸ்லாம் உட்பட எல்லா மதங்களுக்கும் பொருந்துவதாகும்.

பர்மா, ஈரான், லிபியா, லத்தீன் அமெரிக்கா நாடுகளின் பக்கம் கவனித்தால் அங்கெல்லாம் சமூக ஒடுக்குதலை ஒழித்து சமத்துவத்தை மீட்டெடுக்கும் சமூக மாற்றத்தை நோக்கி நடத்தப்படும் போராட்டத்துக்கு அந்நாட்டு மதங்கள் தடைகளாக அன்றி தூண்டுகோலான சக்திகளாக செயல்பட்ட வரலாற்றின் பக்கம் கவனத்தை சற்றே செலுத்துமாறு சுவாமியவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேம்.

(அடுத்த வாரம் முடியும்)

# மூன்று நிகழ்வுகள்- ஒரு பார்வை

29.04.1989, சனி, பிற்பகல் 3.30 மணி, கைலாசபதி அரங்கம், யாழ். பல்கலைக்கழகத்தில் மூன்று நிகழ்வுகள் பார்க்கக் கிடைத்தன. கெட்ட சூனியக்காரி (கவிதை நாடகம்), கவிதையரங்கு, அடுப்படி அரட்டை (நாடகம்) இவையே இம் மூன்று நிகழ்வுகளும்.

பார்க்கக் கிடைத்ததில் மனதில் தொற்றிய சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விருப்பம். முதலில் 'கெட்ட சூனியக்காரி'. எழுதியவர்: லலிதா புறாடி. நெறியாள்கை: சி. சுமதி.

''கெட்ட சூனியக்காரியின் கதையைக் காட்ட வந்தோமே .....'' என்று ஒரு பெண் ஆடியபடி வருகிறாள். அவளுக்குப் பின்னால் இன்னும் சிலர். பாடல் கேட்க இனிமையாக இருக்கிறது. ஆடல் அழகாக இருக்கிறது. கருத்தைக் கூர்ந்து கவனிக்கிறோம். என்ன சொல்ல வருகிறார்கள் என்று விளங்கவில்லை. அருகில் இருந்த நண்பனிடம் ''என்ன சொல்கிறார்கள்?'' என்று கேட்டேன். ''கொஞ்சம் பொறு'' என்றான். திரும்ப ஆட்டத்தைப் பார்த்தேன். அழகாக இருந்தது. பாடல் இனிமையாக இருந்தது. Union Carbide என்று எழுதியபடி ஒரு மட்டை ஒருவரில், கொக்கோ கோலா (அல்லது பெப்சி கோலா) படம் வரைந்த இரண்டு மட்டைகள் இன்னொரு சிறுவனிடம். இரண்டு சிறுவர்கள் (அல்லது இளைஞர்கள்?) வாள் சண்டை போட்டார்கள். அட, திடீரென்று நாடகம் முடிந்து விட்டது. திரும்ப ஆடியபடி வந்தவர்கள் போனார்கள். மீண்டும் நண்பனிடம் கேட்டேன், ''என்ன விளங்கிச்சுதோ?'' அவன் கையை விரித்தான். உதட்டைப் பிதுக்கினான். லலிதா புறாடியிடம் தான் இதன் பொருளைக் கேட்க ஒரு நடை அவர் வீடு போய்வர வேண்டும். விளங்காதது எனது பிழையாகவும் இருக்கலாம். (தப்புவதற்காக ஒரு வசனம்.) இது பற்றிக் கதைக்காமல் விடுவது நல்லது.

மேடையின் முன் பகுதியை சரி அளவாகப் பிரித்து நால்வர் நின்றனர்—கையில் கவிதைகளை வைத்துக் கொண்டு. இது சி. சிவரமணி தயாரித்த கவிதையரங்கு. கவிதைகள் ஒன்றும் சோடை போகவில்லை. நல்ல கவிதைகள். சத்தியனின் கவிதை வாசிப்பில் உயிர்ப்புத் தெரிந்தது. கவிதைகளின் வீச்சு நெஞ்சில் ஆழமாகப் பதிந்து போனது. சிவரமணியிடம் சில கேள்விகள்: உயிர்ப்பான இக்கவிதைகளின் அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கு இந்த வடிவத்தை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்? இக்கவிதைகளையே நிகழ்த்திக் காட்டும்போது அது இன்னொரு பரிமாணத்தையும் தொடுமல்லவா? கவியரங்கம் போய், இப்படி மூன்றோ நான்கோ பேர் நின்று கவிதை வாசிக்கிற அமைப்புப்போய், கவிதா நிகழ்வையும் தாண்டி, இனி இன்னொரு பரிசோதனை முயற்சி செய்ய வேண்டிய தேவையை கவிதைகள் வேண்டி நிற்கின்றன. ஆனால் நீங்கள் திருப்பியும் பழைய தடத்திற்குக் கொண்டு போகிறீர்கள். கவிதைகள் கவிதைகளாக நின்று நெஞ்சைத் தொட்டளவுக்கு அதன் வாசிப்பு அமையவில்லை. சிவரமணி, இனிவரும் தயாரிப்புகளைப் பற்றிக் கொஞ்சம் யோசிக்கலாம்.

திரையை விலக்கியபடி வெற்றிலை பாக்குத் தட்டத்துடன் கொஞ்சம் வயதுபோன ஒரு பெண் வருகிறார். சி.சுமதி எழுதி (தமிழாக்கம் வீ. வசந்தா) நெறியாள்கை செய்த 'அடுப்படி அரட்டை' எனும் நாடகம் இது. நிமிர்ந்து உட்கார்கிறோம். ஏமாறிச் சலித்துப்போன மனதுக்கு ஒரு ஆறுதல் கிடைக்குமென்ற நம்பிக்கை. நான்கு கதிரைகள். அதை நிறைத்தபடி பெண்கள். வெறும் அரட்டையாகத்தான் தொடங்குகிறது. எப்படியோ சுற்றிப்போய் இராணுவத்தால் கற்பழிக்கப் பட்ட பெண்ணைப்பற்றி கதை தொடர்கிறது. மிகமுக்கியமான விஷயம் இது. இவ்வாணாதிக்க அமைப்பு இத்தகைய அனர்த்தங்களைத்தான் விளைவிக்கும். கற்பழிக்கப் பட்ட பெண் படுகிற மனச் சித்திரவதை இந் நாடகத்தின் உயிர்ப்பான ஒரு அம்சம். அவ்வளவுதான். இந் நாடகத்தைப் பற்றி நல்லதாகச் சொல்ல மேலும் வார்த்தைகள் இல்லை. முதலில் ஒரு கேள்வி: இது நாடகமா? நிகழ்த்திக் காட்டப்படவில்லை. பாத்திரங்கள் வார்க்கப்படவில்லை; வளர்க்கப் படவில்லை. ஒரு அனுபவத்தைத்தானும் தொற்ற வைக்க முடியவில்லை. நாடகத்தின் எத்தகைய அம்சத்தையும் காணவில்லை. வெறும் அரட்டைதான். (ஆனால் நாடகம் என்றுதான் குறிப்பிட்டார்கள்.) நாடகம் என்று சொல்ல முடியாததனால் அதன் கலையாக்கம் பற்றிக் கதைக்க ஒன்றுமில்லை.

ஆனால், இதன் கருத்துக்கள் பற்றிக் கதைக்கலாம். இவை ஆணாதிக்கத்திற்கு எதிரான கருத்துக்களா? அல்லது ஆண்களுக்கெதிரான கருத்துக்களா? ஒரு இராணுவத்தானால் கற்பழிக்கப்பட்ட பெண். அந்த இராணுவத்தான் இரண்டு கருதுகோள்களின் பிரதிநிதி.

1. எதேச்சாதிகாரம்.

2. ஆணாதிக்கம்.

இரண்டும் எதிர்க்கப்படவேண்டியது. இது சந்தேக மற்ற வாதம். ஆனால் இத்தகைய பெண்ணின் மனக்குமுறல்கள். அவளைச் சுற்றியுள்ள பெண்களின் மனக் குமுறல்கள் ஆண்கள் மீதான காழ்ப்புணர்வில் எழுந்தன என்று உணரவைக்கின்றது. பின்வரும் கருத்துப்பட ஒரு வசனம்: ''கால்களை விரித்து விட்டுப் படுத்திருப்பேன். அவன் எனக்குள் போவான். கண்களை மூடி அந்த அசிங்கத்தைச் சகிப்பேன்'' என்கிற மாதிரி. செக்ஸ் இரு பாலாருக்கும் பொதுவான பிரச்சினை. செக்ஸ் பற்றிய எங்கள் எண்ணக் கருக்கள் வேறு வகையானவை. முக்கியமானது ஆண் பெண் உறவு தொடர்பாக எங்களிடம் அடிப்படை அறிவு கூட இல்லை. நாங்கள் அது பற்றிக் கற்கவும் இல்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில் ஆண் பெண் உறவு பறறி அதன் திருப்தி பற்றி விமர்சிக்கவும், முடியாது. ஆனால் இத்தகைய உறவில் ஆணாதிக்கக் கருத்து மேலோங்கி நிற்பது உண்மை. ஆனால் அது பற்றிய விமர்சனப் பார்வை அற்று, ஆண்கள் மீதான தூற்றுதல் தான் இடம் பெறுகிறது. மிக வேடிக்கையான விஷயம் கொழுத்த உடலும், வியர்வை நாற்றமும் தான் இவர்களுக்கு ஆணாதிக்கத்தின் குறியீடு. மெல்லிய உடலும் வாசனைத் திரவியங்கள் பூசிக் கொண்டவனும் இவர்களுக்குப் பரவாயில்லைப் போலும். இது குட்டி முதலாளித்துவச் சிந்தனைப் போக்குத்தான். யாருக்கு இந்த வியர்வை நாற்றப் பிரச்சினை? அதிகாரியாக இருக்கிற அல்லது உயர்வட்டக் குழாத்தினராக உள்ள பெண்களுக்கு இது பிரச்சினை. வெங்காயம் கிண்டுகிற பெண்களுக்கல்ல.

இந்த இடத்தில் தான் வேறு சில விஷயங்களையும் கதைக்க வேண்டும். சேற்றுக்குள் நின்றபடி, நீருக்குள் காலை நனைத்தபடி குனிந்து நின்று நாற்று நடுகிறாள். வெங்காயம் நடுகிறாள். நாரி விண் விண்ணென்று வலிக்கிறது. வெங்காயம் கிண்டுகிறாள், மிளகாய்ப் பழம் ஆய்கிறாள். அரிவி வெட்டுகிறாள். அவளுக்கு நாட் கூலி 25 ரூபாவிற்குட்பட்டது. ஆனால் அதே தோட்டங்களில், வயல்களில் கூலி வேலை செய்கிற ஆணுக்கு நாள் கூலி 75 ரூபாவிற்கு மேற்பட்டது. அத்துடன் பெண்களுக்குப் பருவகால உழைப்பு. அவர்கள் கூலி வேலைக்கு வரமுன்னர் சமைத்து விட்டு வரவேண்டும். பிறகும் போய்ச் சமைக்கவேண்டும். இரவில் நாரிக்கு, முதுகுக்கு, கால்களுக்கு எண்ணெய் தேய்த்து விட்டு, நாரி குத்திக் குத்தி வலிக்க, கால்கள் உளைவு எடுக்க பாயில் புரண்டு புரண்டு அரைகுறைத் தூக்கத்தில் துயில்வாள். ஆண் என்ன செய்வான்? பெரும்பாலானோர் கூலி வேலை முடிந்தவுடன் குடிக்கப் போவார்கள். (கள்ளு, கசிப்பு, சாராயம்) நிறைவெறியில் படலையையும் உதைத்துத் திறந்து வருவார்கள். சாப்பிடுவார்கள். அதுவும் சரியில்லாவிடில் அதற்கும் ஏச்சு, அடி. பிறகு படுக்கைக்கு மனைவி தேவை. அவள் நாரி வலிக்கப்படுத்திருப்பாள். ஆனால் இவனுக்குத் தேவை. மதிப்பிற்குரிய லலிதா புறாடி, சி. சுமதி அவர்களே, ஆணாதிக்கம் இங்கு இருக்கிறது. அவளுக்கு அவனின் வியர்வை நாற்றமல்லப் பிரச்சினை. நாரி வலிப்பு, கால் உளைவு இவைதான் பிரச்சினை. 25 ரூபாதான் பிரச்சினை. இங்கிருக்கிறது ஆணாதிக்கம். கடைகளிலெல்லாம் பெண்களை மலிவான ஊதியத்திற்கு வைத்திருக்கிறார்கள். இன்றைய பத்திரிகையின் (30.04.1989) சின்னஞ்சிறு விளம்பரப் பகுதியைப் பாருங்கள். ''எமது தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களை வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.''

''யாழ். நகரில் கிறீம் ஹவுசுக்கு காசாளர், விற்பனையாளர் தேவை. நகரின் அண்மையில் இருக்கும் பெண்கள் விரும்பத்தக்கது''.

''விற்பனைப் பெண் பணியாளர் நான்கு பேர் தேவை. சைக்கிள் ஓடத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்''.

(இன்னும் பல). இவை விளம்பரம். இங்கு இருக்கிறது ஆணாதிக்கம். தேடவேண்டிய இடத்தில் அல்லாது வேறெங்கோ தேடினால் கொழுத்த உடலும், வியர்வை நாற்றமும் தான் ஆணாதிக்கமாக இருக்கும். ஆணாதிக்கத்தின் கோர நகங்களால் அல்லல் படுபவர்கள் தோட்டங்களிலும், வயலிலும், கடற்கரையிலும், கடைகளிலும், சந்தைகளிலும், குச்சு வீடுகளிலும் இருக்கும் போது நாங்கள் வேறெங்கோ தேடுகிறோம். தேடித் தேடி அலுத்து, வியர்வை நாற்றத்தையும், கொழுத்த உடலையும் பிரச்சினையாக எடுக்கிறோம். அவ்வளவுதான். □

அனந்து

## கலைச்சாரல்

## ஆம், அவனும் மனிதனே!

— வரவர ராவ்

பிறந்த போது அவனை
மனிதன் என்றனர்
வளர்ந்தபோது அவனை
மனிதன் என்றனர்

வயிற்றுப் பிழைப்புக்காய்ப்
பொலிசில் சேர்ந்தபோது —

குறுந்தடி, சிறை, துப்பாக்கி
'வேன்' என்று
ஆயிற்று
அவன் பெயர்.

தன் சொந்தக் குழந்தைகளின்
துர்ப்பாக்கிய அன்னை
பிள்ளைகளைப் பயங்காட்ட
அவனானான்
பூச்சாண்டி.

அந்நியப் பிள்ளைகளுடன்
தன் சேய்கள்
சேர்ந்து
கல்வீச
வசை பொழிய
வைத்த குறி
அவனானான்.

அவனது
பூட்ஸ் சத்தம்
மடிந்தொழிகையில் —
மடிப்புகள்
அழுத்தமாய்ப் பதிந்த
அவனுடைகள்
தளர்ந்து சோர்கையில் —
அவன் பாதம்
தரையைத் தொடுகையில் —
அவன் தசைத்தோல்
காற்றைத் தீண்டுகையில் —
அவன்
மனிதன்.

பெண்ணொருத்திக்குக்
காதலை
பிள்ளைகட்குப்
பாசத்தை
சுரந்துவக்கும் உயிரணுக்கள்
உடலில் உயிர்த்தெழும்போது
கூரையிலிருந்து
உயிரற்றுத் தொங்குதுபார்
காக்கியுடை.

(பிரபல சிவில் உரிமைப் போராளி டொக்ரர் கே. பாலகோபால் இன் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கம்: ஸஹீன்.) □

## பிரளயம்

சாதாரணமாக மனிதன் தரையில் நடக்கும் போது கால்கள் அழுந்துவதில்லை. கெட்டித்தரை காரணமாக இருக்கலாம். ஆனால் காளைகளின் குளம்புகளும், உழுபவன் கால்களும் ஆழமாகப் புதைகிறது. அது 'எனக்குள் வந்துவிடு' என்னும்படியான இரகசிய அழைப்பு. அதை அவன் புரிந்து கொள்கிறான். தான் மண்ணால் நேசிக்கப்படுவது அவன் மனதிற்குப் பெரிய விஷயமாக இருக்கிறது. அந்த அழைப்புக்கு 'நாளை வருகிறேன்' என்பதைப் போல அடுத்த அடிகளை எடுத்து வைக்கிறான். மீண்டும் அதே அழைப்பு, மீண்டும் அதே மறுப்பு. இந்த அழைப்பிற்குப் பதில் சொல்லியாகவேண்டும்என்பது அவனுக்குப் புரிந்திருக்கிறது. அதனால் அவன் மரணத்தை புரிந்து கொண்டிருக்கிறான். அதைப் புரிந்துகொண்ட காரணத்தினாலேயே மண்ணை, நம் எல்லோரையும் விட, நெருங்கி நேசிக்கிறான். ஒரு அழிவின் போதும் தனிப்பட்டதொரு ஆக்கம் உள் நின்று இயங்குவதை அவனால் தெளிவுடன் காணமுடிகிறது.

ஏர்கொண்டு நிலத்தைக் கிழிக்கிறார்கள். சிறு பிரளயத்தைப் போல மண்பரப்பு புரண்டு உருள்கிறது. கட்டிடங்கள் ஓசையிட்டுச் சரிவதைப்போல மண்கட்டிகள் பொடியாகிச் சப்திக்கின்றன. மரங்கள் சாய்ந்து விழுவதைப் போல ஏர்க்காலில் சிக்குண்ட புல்பூண்டுகள் மூச்சுத் திணறி முனகி விருப்பமற்றுச் சாகின்றன. கடைசி வரையிலும் அவை தங்கள் பிடிப்பின் பலத்தை நம்பிக்கிடந்து, பின் அறுந்து போய்ச் சாகின்றன. அழிவுக்கென்றே புரண்டுவரும் அலைகளிற்கூட சீரான அம்சம் இருக்கிறது. அதேபோல் இதுவும் சீராகவும் அமைதியாகவும் நிலத்தைப் பிரளயத்துக்கு உள்ளாக்குகின்றன.

மேலிருக்கும் மண் கீழுக்குப் போய்ச் சாகின்றது. கீழிருக்கும் மண் மேலுக்கு ஜனிக்கின்றது. அதை உற்றுப் பார்க்கும் போது ஓசைகள் கேட்கிறது. உண்மையில் அவைகளும் குழந்தையைப் போல அழுதுகொண்டே ஜனிக்கின்றன. அந்த அழுகையைக் கேட்பதில் இன்பம் இருக்கிறது. யோனி விரிந்து சிசுவின்

(11ஆம் பக்கம் பார்க்க)

# சத்யஜித் ரேயின் பதர் பாஞ்சாலி

சசி. கிருஷ்ணமூர்த்தி

யாழ். பிரெஞ்சு நட்புறவுச் சங்கம் அண்மையில், உலகப் புகழ் பெற்ற இந்தியத் திரைப்படமேதையான சத்யஜித் ரேயின் 'பதர் பாஞ்சாலி' என்ற வங்காளத் திரைப்படத்தை வீடியோ மூலம் காண்பித்தது. ஒரு திரைப்படக் காவியம் என்று சொல்லக் கூடிய உன்னதபடைப்பான 'பதர் பாஞ்சாலி' 1955 இல் எடுக்கப்பட்டது தொடக்கம், சர்வதேசரீதியில் பேசப்பட்டு வரும் ஒரு கலைப் படைப்பு.

'பதர் பாஞ்சாலி' சத்யஜித் ரேயின் முதல் திரைப்படம். சாதாரண திரைப்படக் கமெராவைக் கொண்டு, எந்தவித ஆர்ப்பாட்டங்களுமின்றி எடுக்கப்பட்ட இத் திரைப்படத்தின் ஒவ்வொரு அம்சமும் ரேயை ஒரு மகத்தான திரைப்படக் கலைஞனை எமக்குக் காட்டி நிற்கின்றன. 1915—20க்கு மிடையில் இந்தியக் கிராமமொன்றின் வாழ்வைப் பகைப்புலமாகக்கொண்ட இத் திரைப்படம் வங்காளக் கிராமிய வாழ்வின் உண்மைத்தன்மையை, மனித உறவுகளின் ஆழத்தை மிக நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றது. உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒளிப்பதிவு நேர்த்தி, சூழலை மனதில் படியச்செய்யும் இசை, படம் முழுதும் விரவிநிற்கும் கவித்துவச் சிறப்பு என்பன காலங் கடந்தும் எம்மைப்பாதிக்கின்றது, வியப்புறச் செய்கின்றது.

வங்காளத்தில், நிஷிந்திபூர் என்ற கிராமத்தில் பரம்பரையாக வாழ்ந்து வரும் ஹரிந்தர் ரே என்ற ஏழைப் பிராமணனின் வாழ்க்கையின் இலட்சியங்கள் நாடகங்கள் எழுத வேண்டும், மூதாதையர்கள் வாழ்ந்த தன் வீட்டைத்திருத்தவேண்டும், தந்தைபட்ட கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டும், மகளுக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும், மகனைப் படிக்க வைக்கவேண்டும் என்பவையே. ஏழ்மையே எஞ்சி நிற்கும் அந்த கிராமத்தில் அவரது கனவுகள் நிறைவேறப்போவதில்லை. வேற்றூருக்குப் பிழைப்பைத் தேடிப் போகின்றார். மனைவியோ வறுமையோடு போராடுகின்றாள். பிள்ளைகளுக்கோ—துர்காவிற்கும் அபுவிற்கும் என ஒரு உலகம் இருக்கின்றது. தமது வீட்டில் ஒதுங்கிவிட்ட பில்ஸிக் கிழவி, கிராமத்துத் தோழர்கள், இனிப்புக்காரன், கிராமத்துத் திருவிழா, படப் பெட்டிக்காரன், இவர்களோடு அவர்கள் கொள்ளும் உறவில் சந்தோசமும் துக்கமும் கலந்திருக்கிறது. மழையும், காற்றுமான ஒரு இரவில் துர்கா இறந்துபோகின்றாள். வீடு திரும்பும் ஹரிந்தர் ரே மகளின் இழப்பால் பெருந்துயரத் துக்குள்ளாகின்றார். தன் மூதாதையர்கள் வாழ்ந்த வீட்டையும், கிராமத்தையும் விட்டு வெளியேறுகின்றார்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியக் கிராமங்களில் ஏற்பட்ட பொருளாதார உடைவுகள் மக்களை நகரங்களை நோக்கிப் பெயர நிர்ப்பந்திக்கின்றன. புறநிலை மாற்றங்கள் கிராமிய வாழ்வில், மனித உறவுகளில் பெரிதும் சலனத்தை ஏற்படுத்துகின்றன. இதையே 'பதர் பாஞ்சாலி' எந்தவித பிரச்சார வாடையுமின்றி கலைக்கேயுரிய விதத்தில் வெளிப்படுத்துகின்றது. பிபூதி பூஷண் பனர்ஜி என்பவர் வங்காளத்தில் எழுதிய இந்த நாவலைப் படமாக்குவதற்கு இதில் காணப்பட்ட மனிதத்துவம், கவித்துவம், உண்மைத் தன்மை ஆகியவையே தமக்கு உந்துதலைக் கொடுத்ததாக ரே குறிப்பிடுகின்றார்.

சத்யஜித் ரே, 'பதர் பாஞ்சாலி' தொடக்கம் அவரது இறுதிப்படமான 'கான சத்ரு' வரை ஏறக்குறைய 25 படங்களுக்குமேல் படைத்துள்ளார். பெரும்பாலான கலைஞர்களைப் போல வியாபாரச் சூழலில் தம்மை இழந்துபோகாது ஒவ்வொரு திரைப்படங்களிலும் தனது கலாமேதைமையை வெளிப்படுத்தி வந்துள்ளார். திரைப்படத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு வெளிப்படுத்தும் வினைத்திறன், இயல்பாக இவரிடம் முகிழ்த்த கலை ஈடுபாடு, சாந்தி நிகேதனில் பெற்றுக் கொண்ட ஓவியப் பயிற்சி, இளமையிலிருந்தே திரைப்படங்களில் ஈடுபாடும், பல சர்வதேச திரைப்பட மேதைகளைப் பற்றி அறியவும் பார்க்கவும் கிடைத்த வண்டன் சூழல், திரைப்படங்கள் பற்றிக் கற்றுக் கொள்ளக் காட்டிய ஆர்வம் — இவையே அவரது மேதைமைக்கான காரணங்கள். 1978 இல் இவருக்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் 'டொக்ரர்' பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. 'கடைசி அரை நூற்றுண்டின் அதி உன்னத திரைப்படநெறியாளன்' என்ற கௌரவத்தை பிரித்தானிய திரைப்படக் கழகம் (British Film society) 1975 இல் அளித்தது. 'எல்லாக் காலங்களிற்குமான ஒன்பது மகத்தான திரைப்படக் கலைஞர்களுள் ரேயும் ஒருவர்' என்று மொஸ்கோ திரைப்பட விழா குறிப்பிட்டிருந்தது. கடந்த வருடப் பிற்பகுதியில், பிரான்சின் அதி உயர் விருதான Legion d'Honour—ஐ அந்நாட்டு ஜனாதிபதியே கல்கத்தாவிற்கு நேரடியாகச்சென்று 'ரே'க்கு அளித்தார். □

## வாழ்வும் மருந்தும்

எனது தேவையை, நீங்களே
தீர்மானித்தலும், தரமறுத்தலும்
எவ்விதம் நியாயமாகும்.

தேவைகள் நீர்வளையங்களாய்
விர்ந்து விரிந்து செல்கையில்
நீங்களோ அவற்றை ஒடுக்குகின்றீர்,
இருப்பையும், உயிர்ப்பையும்
உணர்த்தும் மார்க்க மொன்றில்
சிதைபட்டும் குன்று உறுதியுடன்
வீழ்ந்து கிடக்கின்றேன்.

ஒதுங்கி நின்ற பலரெல்லாம்
ஓடி வருகின்றார்
மருந்திடலே மார்க்கமென்று
சுயநலவேலில் காய்த்த
கண்டல்களுடன்
ஒப்பாரி வைக்கின்றார்.

நான் இன்னும் வேண்டுவது
வாழ்வின் தேவைகளே யன்றி
மருந்துகளல்ல.

— மு. புஷ்பராஜன்

## நான் ஜனநாயகவாதி

டொக்ரர் நோயாளியைப் பார்வையிடப் போகும்போது வைத்தியம் படிக்கும் மாணவர்களையும் கூட்டிக்கொண்டு போனார். அப்போது ஒரு நோயாளியைப் பரிசோதிக்கும்படி டொக்ரர் சொல்ல அப்படியே மாணவர்களும் சோதித்துவிட்டு அவருக்கு இப்போது கடுமையான நோய் ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் டொக்ரர் அவருக்கு உடனடியாக ரண சிகிச்சை வைத்தியம் செய்ய வேண்டும் என்று சொல்லியதைக் கேட்டுக்கொண்டிருந்த நோயாளி தன் படுக்கையை விட்டு எழுந்து ஓடத் தொடங்கினான். அவனைப் பிடித்து ஏன் ஓடுகின்றாய் எனவினவ, அவன் நான் ஒரு ஜனநாயகவாதி; பலபேர் எனக்கு நோய் இல்லை என்று சொல்ல ஒருவருடைய சொல்லை நான் ஏற்க முடியாது என்றான்.

பல பேரிடமோ ஒருவரிடமோ சரியான, நீதியான, நியாயமானதைக் காண்பதே புத்திசாலியின் செயல்.

நன்றி:
மணிமொழிக் கதைகள் □

புரிந்துணர்வுடனும், ஐக்கியத்துடனும் வாழவேண்டிய தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களிடையிலும் முஸ்லிம்களிடையிலும் கலவரங்கள் தோன்றுவது, இரு சமூகங்களுக்குமே தீங்கானது. அண்மையில் நடந்த கல்முனைக் கலவரச் சூழலில் எழுதப்பட்டவை இக் கவிதைகள்.

## ஒரு மனிதனுக்காகக் காத்திருந்த அன்றைய தினம்

அன்றையக் காலை
கல்விழுந்த குளம்போன்ற முகத்தோடுதான் விடிந்தது.

தெருவெங்கும் வாகனங்கள் சிறகுகட்டிப் பறந்தன.
சில சில்லாட்டு வண்டிகளும்
குடல் தெறிக்க
இருந்த வேகத்தை எல்லாமே ஒன்றுசேர்த்து
ஓடித் தொலைந்தன புழுதியுடன் புழுதியைப்போல்.

நான் மட்டும்
அந்தக் கடையடியில் காத்திருந்தேன்.
முன்னர் கொடுத்த வாக்குறுதி மீறுது
எனக்குள்ளும் இதயம்
அரிசி அரைக்கின்ற இயந்திரத்தைப் போன்று
சத்தமிட்டு என்னை அச்சப்படுத்தியும்
சொன்னபடி, அந்த மனிதன் வருவான்
என்ற நினைப்பில்
சந்தியிலே மேய்கின்ற மாடுகளும் ஓடிய அன்றையத்
தினத்தில்
என் கண்களை மேயவிட்டுக் காத்திருந்தேன்.

மனிதர்கள்
காலாலே பறந்தார்கள்
எல்லோர்க்கும்
பிடரியிலே குதி பட்டது.

சில கிழவிகள்
அன்றுதான் வேகமாய் நடந்ததை நான் கண்டேன்.
அன்று ஆமை கூட
புலிப்பாய்ச்சல் பாய்ந்திருக்கும்.
அந்த அளவுக்கு பயங்கரமாய் இருந்தது நகரம்.

நானோ
கடையடியில் அவனைக் காத்தபடி
பால்மணம் மாறாத சூரியன்
கடலுக்குள் இருந்து நடைபழகி வருவதற்குள்
எனது நகரம் கறுத்தது.

இருந்தும் கண்களை மேயவிட்டுக் காத்திருந்தேன்
எனது நினைவில் வரும்போது உம்மா
பழுக்காத மாங்காய் மாதிரி விறைத்த முகத்தோடு
இன்னொரு தரமும் அகதியாய் போவதற்கு
ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்த
காட்சிகள் வந்து போயின.

அந்த மனிதன்
வந்தானோ போனானோ
நானறியேன்!
காற்றுமட்டும் பொய்யையும் மெய்யையும் கலந்து
எதையோ சொல்லிக்கொண்டு போனது
காதில் விழுந்தது.

— சோலைக்கிளி □

## நாம் இருவரல்ல...!

நானுமுன் அயல்வாசி.
நானுமோர் தமிழ்பேசி.

நகம், குருதி, மயிர் அனைத்தும்
உன் போலவே...!
நாள், உணர்வு, சுமை அவையும்
உன்போலே...!

எம்மிடையே மூச்சுவாங்கும்
மயிருறவும் செத்துவிட்டால்
நானும் நீயும் வேறென்ன
'இரு சடங்கள்' என்பதைத் தவிர...!

உன்னுடைய பாதைகளின்
குறுக்கமர்ந்த பாறைகளில்
நானுமொன்றாய் நிச்சயமாய்
இருந்ததில்லை...!
நானென்றும் பேசேன்.

உன்னுடைய கைகளது
குறிவைக்கும் அவ்விரலைச்
சற்றமர்த்திப் புன்னகையைக்
காட்டும்வரை நான் துடிப்பேன்...!

உன்னைப்போல் நானுமென்று
என்னிடமே கேட்டுக்கொள்வேன்...!

— நற்பிட்டிமுனைபளீல் □

## திசையின் சிறுகதை

# தேசியஇனப் பிரச்சினைக் கதை - 3

ஒடுக்குமுறைகளுக்கெதிரான தமிழர்களின் போராட்ட வரலாற்றில், 1961இல் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகமும் முக்கியத்துவம் பெறுகிறது. வடக்கு – கிழக்கில் இரண்டு மாதங்களாக அரசு நிர்வாகத்தை அது ஸ்தம்பிக்கச் செய்தது.

இப்போராட்டப் பின்னணியில் எழுதப்பட்ட உரிமைக்கு உயிர் சிறுகதை முதலில் சுதந்திரன் பத்திரிகையில் (1962) வெளிவந்தது; பின்னர் ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள் (1963) நூலிலும் இடம்பெற்றுள்ளது.




# உரிமைக்கு உயிர்

## முத்து சிவஞானம்

விசாலமான அந்தக் கண்டி ரோட்டில் வாகனச் சந்தடி அற்றுவிட்ட நேரம். நடுஇரவு பன்னிரண்டு மணி!

யாழ்ப்பாணத்துக் கச்சேரி வாசல் முகப்பில் தளராத உள்ளத்துடன் தமிழ்க் குலத்துச் செல்வங்கள், தமிழ் உரிமைப் போரில் கலந்து கொண்டிருக்கின்றன. திரும்பும் இடமெல்லாம் தமிழர் வெள்ளம்; தமிழ் இசை.

உரிமைப் போருக்காக உடல் வருத்திக் கிடக்கும் பெண்கள்; குழந்தைகள்; பெரியவர்கள்;

இளைஞர்கள் — இவர்களிடையே, ஆண்கள் பகுதியின் முன்னணி வரிசையில் முகத்தில் முத்துக் கோர்க்கும் புன்னகையுடன் துரைராசா

அமர்ந்திருக்கிறான். அவனுக்குப் பின்னால் தமிழ் மண்ணின் இளம் இரத்தத்திற் குரியவர்கள்! அடுத்த பந்தியில் தமிழ் மொழியின் வாழ்வுக்காகத் தங்களை அர்ப்பணஞ் செய்ய வந்திருக்கும் தாய்க்குலம்!

அவர்கள் புரிவது,
அறப்போர்; அன்னை
மொழியின்
விடுதலைப் போர்!
''வாழ்க தமிழ்மொழி
வாழ்க நிரந்தரம் வாழிய
வாழியவே''

தமிழ்த்தேன் குழைந்த தமிழிசை அங்கு தவழ்ந்து ஒரு புதிய தெம்பை ஊட்டிக் கொண்டிருக்கிறது.

குரலுக்குரியவள் —

கோமளா!, துரைராசனின் தங்கை. தமிழுக்காக உழைப்பதில் தமையனை மிஞ்சிவிட்டவள். அவளைத் தங்கையாகப் பெற்றதில் துரைராசனுக்கு அளவற்ற பெருமை.

தங்கையின் பாடலில் துரைராசனின் மனம் இளகிக்கரைகின்றது. இசையினுக்கு அவ்வளவு வல்லமையா?

தமிழின் நிலை அவன் நெஞ்சைக் கசக்கிப் பிழிய, அவனும் குரலெடுத்துப் பாடுகிறான்.

''வாழ்க தமிழ்மொழி
வாழ்க நிரந்தரம் வாழிய
வாழியவே''

மறுகணம் —

எத்தனை குரல்கள் ஒலிக்கின்றன. உணர்ச்சி பீறிடுகின்றது. தமிழ் வெள்ளம் தங்குதடையின்றிப் பாய்கிறது.

நேரம் பின்னிரவு — ஒரு மணியையும் தாண்டிக்கொண்டிருக்கிறது.

துரைராசனின் எண்ணத்தில் ஒரு துளக்கம்; முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த புன்னகைக்குப் பதில்...... ...தீவிர எண்ண ஓட்டங்களின் பிரதிபலிப்பு. வாய் அசைவு வெறுமனே தேங்களை இசைப்பதிற் தொழிற்பட்டிருந்ததே தவிர, சிந்தனைகள் நல்லூரின் ஒரு குச்சு வீட்டைச் சுற்றிப் படர்ந்துகொண்டிருந்தன.

இந்த நேரத்தில் என்னவோ ...... ஏதோ...? தங்கச்சி வைத்துக் குடுத்துவிட்டுவந்த குடிநீருக்குப் பிறகு ஒண்டுங் குடுக்கேல்லையே......! ஒண்டுக் குரண்டுக்குப் போறதுக்குப் பிடிச்சுக்கொண்டு போய்விடவும் ஒருதரும் வீட்டில்இல்லை... ......

மனம் துளங்கிப் புழுங்குகிறது.

அரசடி வீதிக்கரையில் ஒரு சிறு குடிசை; செத்தைத் தட்டிகளின் மறைப்பில் உள்ளே ஒரு கிழிசற்பாயில், காசநோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தாயின் உருவம் அவன் உள்ளத்தை ஆக்கிரமிக்கிறது.

பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட பெற்றதாய், படுத்த படுக்கையாய் கிடக்க .........

இங்கே —

தமிழ்த் தாய்க்காகப் போராட்டம்.

எண்ணங்கள் தவித்துத் தவித்து, உணர்வுகள் வேகப்பட, நினைவுகளின் கிளைப்பில் ......

''மேனை...... இப்பிடிக் கிட்ட வாமேனை. உன்ரை தேப்பன் செத்துப்போக நான் கையடிச்சு, நெருப்புத்திண்டு உங்களை இவ்வளவுக்கும் வளத்துப் போட்டேன். இனி உன்ரை தங்கச்சியை ஒரு கரை சேர்த்து, அவள் எங்கையன் சுகம்பெலமா இருக்கச் செய்ய வேணும். இப்படி நீ நெடுக விளையாட்டுப் புத்தியிலை திரிஞ்சா...... என்ன மேனை நடக்கும்......''

துரைராசனின் தாய் கண்ணீர் வடிக்கிறாள்.

துரைராசனின் கண்களும் பனிக்கின்றன.

கோமளம் குடிநீரை ஆற்றியபடி எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

''அதெல்லாம் நான் செய்து வைப்பன் அம்மா. நீ ஒண்டையும் யோசியாதை.'' துரைராசனின் மனதில்எழுந்த உறுதி, வார்த்தையாக விழுகிறது. நினைவு தடுமாறுகிறது ...... தங்கையின் எண்ணம தலைதூக்குகிறது.

தலையைத் திருப்பித் தங்கையைப் பார்க்கிறான். அவள் எதுவித சலனமுமற்றுப் பாடிக் கொண்டே இருக்கிறாள்.

அவளை ஒரு கரை சேர்த்து விட்டால் .. ...

பிறகு தமிழ் வாழ்வுக்காகத் தன் உயிரையும் தியாகம் செய்ய அவன் தயார்.

நேரம் நகர்கிறது.

தூரத்தில் இராணுவ வான்களின் பயங்கர உறுமல்!

கூட்டத்தில் ஒரே பதட்டம்; குசுகுசுப்பு!

''ஒருதரும் எழும்பாதையுங்கோ. உயிர்போனாலும் இருந்த இடத்தைவிட்டு ஒருதரும் எழும்பாதையுங்கோ'' உரத்த குரலில் உற்சாகக் குரல்கள் கிளம்புகின்றன.

இராணுவ வான்களின் உறுமல் மிக மிகக் கிட்ட நெருங்கிக் கொண்டிருக்கிறது.

துரைராசன் ஒரு கணம் திகைத்தான். சாவதைப்பற்றி அவனுக்குப் பரவாயில்லை. ஆனால் வீட்டில் சாகக்கிடக்கும் தாய்...... அவனை எதிர்நோக்கி, அவன் வாழவைப்பான் என்ற நம்பிக்கையில் காலங்கழிக்கும் தங்கை கோமளா......

ஒருகணச் சிந்தனை!

விரைடிகள் பறந்தன!

சட்!புட்!, சட்!புட்! ...... வான்களில் இருந்து சப்பாத்துக் கால்கள் குதிக்கின்றன.

எங்கும் ஒருகண நிசப்தம்!

அடுத்த கணம்—

சடார்! படார்! அடிகள்! உதைகள்! இடிகள்!

அவல ஓலம்!

சப்பாத்துக்கள் அங்கும் இங்குமாக ஓடுகின்றன; துரைராசனுடைய உள்ளத்தில் எண்ணங்கள் பல அசுர கதியில் மின்னி மறைகின்றன.

தங்கை கண்ணீரும் கண்களுமாகக் கையேந்திப் பிழைக்க, அவளைச்சுற்றி வல்லூறுகள்! அவள் மானமிழந்து, வாழ்விழந்து, தெருப் புழுதியில் புழுவோடு புழுவாய் ...... அவனுடைய உள்ளம் ஒடிந்து விழுகிறது, இனந்தெரியாத ஒரு அவல உணர்வு அவனுள் எழுகிறது.

மின்னல் விரைடி—

அவன் ஓடுகிறான்; இருள் அவனைத் தன்னுள் மறைத்துக் கொள்கிறது.

சப்பாத்துக்கள் இன்னும் இயங்கிக்கொண்டே இருக்கின்றன.

கல்மாரிகள்!

அட்டூழியத்தனமான அடக்குமுறைகளின் முன், அறப்போர் நிலைகுலைகிறது; கூட்டம் கலைகிறது.

ஆனால்,

அவள் அசையவே இல்லை. ஒரு சில நிமிடங்களில் நடந்துவிட்ட இத்தனை கொடுமைகளையும் பார்த்தும், அவள் கல்லாய்; மரமாய் இம்மியளவும் இங்கன்று அசையாமலிருக்கிறாள்! அவள் அதரங்களின் அசைவில் விடுதலைக் கீதம்!

''இழுத்தெறி அவளை''

அரக்கமணம் படைத்த ஒரு இராணுவ வீரன் —அவனும் மனிதன் — அவளை இழுத்து எறிகிறான்.

இழுத்தெறியப்பட்ட வேகத்தில் கச்சேரி மதில் சுவரோடு அவளுடைய மண்டை மோத, ''அம்மா'' என்ற ஒரு அலறல்...... அவ்வளவுதான்.

அப்புறம் —, அவளைப் பொறுத்தவரையில்—,

அமைதி; இருள்!

உரிமைப் போராட்டத்தில் அவன் உயிரிழந்தபின் ...... தாயின் பிணம் அனாதைப் பிணமாக, சிந்துவாரற்றுத் தருமச் செலவில் தகனஞ் செய்யப்படுகிறது.

முகமலரைத் தவிர்த்து, தலையின் மற்ற எல்லாப் பாகங்களையும் மூடி மறைத்துக் கிடக்கும் பண்டேஜ் பந்தனங்களுடன், பிரக்ஞையும் பிரக்ஞையற்றதுமான நிலையில் கோமளா துவண்டு கிடக்கிறாள். அவள் கட்டிலின்அருகே உயரத்தொங்கும் ஒரு மருந்துப் புட்டியிலிருந்து, இரப்பர்க் குழாய் வழியே சக்தி மருந்து அவள் உடம்பில் ஏறிக் கொண்டிருக்கிறது.

ஒரு துளி! அது அவளுடைய உடலிற் போய்ச்சேர எவ்வளவு நேரம்......!

துரைராசன் சித்தப்பிரமை பிடித்தவனாய் விம்மி விம்மி, வெம்பியபடி தலைகுனிந்து நிற்கிறான்.

எவளுடைய வாழ்வை மலரச் செய்ய வேண்டுமென்பதற்காக, அன்னை மொழியின் உரிமைப் போராட்டத்தை உதறிவிட்டு ஓடினானோ, அவளே அந்த உரிமைப் போரில் தன்னை அர்ப்பணித்துவிட்டு வாழ்வா? சாவா? என்ற நிலையில் ஊசலாடும்போது—

இனி, என்ன இருக்கிறது அவனுக்கு?

அவன் அழுகிறான்.

அவள் கண்கள் திறக்கின்றன. அண்ணனைக் காண்கிறாள்.

வெளிறிக் கிடக்கும் அவள் வதனத்தில் குறுநகையொன்று நிழையோடுகிறது.

அது தியாகத்தின் சுடரா?

அவள் சிரிக்கிறாளா?

துரைராசன் மெல்லக் குனிகின்றான்.

தியாகத்தின் ஒளி ஆளும் அவள் வதனத்து தீட்சண்யத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை அவனால்.

அவள் ஏதோ சொல்ல முயல்கிறாள்;

முடியவில்லை.

மீண்டும் அவளுடைய அதரங்கள் பிரிகின்றன.

''அ...ண்...ணை'' அவள் குரல் சக்தியற்றுச் சன்னமாக ஒலிக்கிறது.

அவன் இன்னும் குனிகிறான்.

அவள் கையைத் தூக்கி அவனைத் தடவ முயல்கிறாள்.

அவன் கையைப் பிடித்துக் கொள்கிறான்.

''என்ன குஞ்சு! என்ன வேணும்......!'' அவனுடைய அன்புக்குரல் அளவுக்கதிகமாகத் தடுமாறுகிறது.

''அண்...ணை... நீ துக்கப்... படா... தை ... நா... ன் ...... நா...ன் ... இருக்...கமாட்டன் ...செத்... தாலும் ...எங் ...... கடை...உரிமை...க் ...காகச்... சாக......வேணும்.'' அவளுக்கு மூச்சு வாங்குகிறது.

''நீங்...கள்...ஏன்...ஓடின...னீங்...கள்?'' அவள் கண்கள் கலங்கின.

''ஓம் குஞ்சு! நான் அண்டைக்கு இடையிலை எழும்பி ஓடினது பிழைதான். இனி என்ரை உயிர்போனாலும் இப்படிச் செய்யன். என்னை நம்பு குஞ்சு!'' அவனுடைய குரலிற் சற்றுக் கொதிப்பு; அவள் முகத்தில் ஆனந்தத்

(11ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தைக்கு முன்னால்

எதைச் செய்விப்பதற்காக இந்தியப் படைகள் இலங்கைக்குத் தருவிக்கப்பட்டனவோ, எதைப்புலிகள் செய்ய வேண்டுமென இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்ததோ அதற்கு நேர் மாறானதே புலிகள் கொழும்பில் வந்து இறங்கியபோது நேர்ந்துள்ளது, என கொழும்பு பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

அதாவது புலிகள் ஆயுதபாணிகளாக — உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஆயுதம் தரித்தவர்களாக கெரில்லா உடைகளோடு கொழும்பில் வந்து குதித்துள்ளனர்.

இது நாடகத்தில் நடைபெறுவதுபோன்ற ஒரு எதிர்பாராத திருப்பமாகும். அது மட்டுமல்ல இந்நிகழ்வானது— பேச்சுவார்த்தை வெற்றி பெற்றாலும் சரி, தோற்றாலும் சரி — புலிகளுக்கு பிரச்சார ரீதியாக மாபெரும் வெற்றியைக் கொடுத்துள்ளதோடு இது இலங்கை வரலாற்றிலேயே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவும் அமைந்து விட்டது என்றும் அவை கூறுகின்றன.

இந்தியப் படைகள் மூலம், இலங்கை அரசாங்கம் புலிகளின் ஆயுதங்களைக் களைய நினைத்தது. ஆனால் கால ஓட்டத்தின் நிர்ப்பந்தம் அவர்களை பூரண ஆயுதபாணிகளாகவே அரசாங்கத்தின் முன் நிற்க வைத்துள்ளதே வேடிக்கை என சண்டே ரைம்ஸ் பத்திரிகை தனது கருத்தை தெரிவித்துள்ளது.

மேலும் பேச்சுவார்த்தையில் அன்ரன் பாலசிங்கத்தோடு கலந்துகொள்வதற்காக வருகை தந்துள்ள திலீப் யோகி போன்றவர்கள், பல கஷ்டத்தின் மத்தியிலேயே முல்லைத்தீவுக் காடுகளில் இருந்து வந்துள்ளதாகவும் மேற்படி பத்திரிகைகள் அறிவிக்கின்றன. அதற்காக அவர்கள் வருகைக்குத் தடையாக நின்றவர்களின் கண்களை குட்டிவிட்டு வருவதற்கு பல பார்த்தந்திரோபாயங்களையே இவர்கள் கையாண்டுள்ளனர் என்றும் வவுனியா பகுதிகளில் நடந்த தாக்குதல்களும் இதையே சுட்டுவனவாகவும் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

புலிகள் தமது கொழும்புப் பயணத்தின் போது தம்மோடு ஒரு ரீ. வி. படப் பிடிப்பாளரையும் எடுத்துச் சென்றனர். யார்தான் ஓய்ந்திருந்தாலும் அவர் பயணம் முழுவதும் ஓயாது படங்களை எடுத்துக் கொண்டே இருந்தாராம். தம்மை கூட்டிச் செல்ல வந்தவர்கள் எடுத்துச் சென்ற இடங்கள், எரிபொருளுக்காய் இறங்கிய ராணுவத்தளம் போன்ற சகல இடங்களையும் அவர் விரிவாகப் படம் எடுத்துக்கொண்டிருந்தாராம்.

புலிகள் ஆயுதங்களோடு பேச்சுவார்த்தைக்கு கொழும்பு வருவதை அரசாங்கம் விரும்பவில்லை என்றும் ஆனால் அவர்கள் அப்படி வருவதையே தொடர்ந்து அழுத்தியதால் அரசாங்கம் விட்டுக் கொடுக்க நேர்ந்தது என்றும் சொல்லப்படுகிறது.

இவர்கள் ஆயுதங்களோடு வர முற்பட்டதின் காரணம் என்ன?

இவர்கள் தமது பாதுகாப்பு சம்பந்தமாக யாரையும் நம்பவில்லை என்பதையா?

என்னவாய் இருந்தபோதும் அவர்கள் பேச்சுவார்த்தைக்காக கொழும்பு வந்தமை, அவர்கள் அரசாங்கத்தில் வைத்துள்ள நம்பிக்கையையே காட்டுகிறது என்றும் சொல்லப்பட்டுள்ள அதே நேரத்தில் இது சம்பந்தமாக சண்டே ரைம்ஸில் வெளியிட்டுள்ள கார்டூனில், ''புலிகள் இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைக்கு இணங்கியதற்குக் காரணம் அவர்கள் இலங்கை அரசாங்கத்தை விரும்புகிறார்கள் என்பதல்ல அவர்கள் இந்தியாவை வெறுப்பதை விட இவர்களைக் குறைவாக வெறுக்கிறார்கள்'' என்பதேயாகும். என்று அங்கதப்பாணியில் போடப்பட்டிருந்தது.

## இந்தியாவின் கருத்து

இந்தியா புலிகளோடு அரசாங்கம் பேசுவதை வரவேற்கிறது. ஆனால் அவையாவும் உடன்படிக்கையின் எல்லைகளை மீறக்கூடாதென்ற நிபந்தனையையும் விதித்துள்ளது. ஒரு விதத்தில் இலங்கை நடத்தும் பேச்சுவார்த்தை இந்தியா விட்டுக் கொடுக்கத்தயாராய் இருக்கும் கயிற்றின் நீளத்திலேயே தங்கியுள்ளது எனக் கூறலாம்.

இந்தியா அழுத்தும் உடன்படிக்கையின் வரையறைகள் எவை?

முதலாவது பேச்சுவார்த்தை மூலம் ஏற்படும் இணக்கத்தீர்வானது இலங்கையின் ஐக்கியம்; பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அத்தோடுமாகாண சபைகளுக்கு — குறிப்பாக வடக்கு — கிழக்கு பகுதிகளுக்கு அதிகாரப்பரவலாக்கம் இடம் பெறுவதன் மூலம் தமிழ் பேசும் இனம் தமது சுயாதீனத்தை அனுபவிக்கக்கூடியதாக அமைய வேண்டும்.

இரண்டாவது தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும். தலைவர்களுக்குத் தேவையான ஆயுதங்களை மட்டும் அவர்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படலாம்.

மூன்றாவது வன்முறை அரசியலை விட்டு ஜனநாயக ஓட்டத்துக்குள் தம்மையும் இணைத்து விடுதலைப்புலிகள் இயங்க முன்வரவேண்டும். இது மறைமுகமாக ஏற்கனவே தேர்தல் மூலம் நிறுவப்பட்ட மாகாண சபை அமைப்புக்கு குந்தகம் ஏற்படக் கூடாதென்பதே. அதேநேரத்தில் வட — கிழக்கு இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பானது ஒத்திவைக்கப்படுவதை இந்தியா எதிர்க்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



கொழும்பு இராணுவத்திடலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் வந்திறங்கிய போது எடுக்கப்பட்ட படம். வலமிருந்து இடமாக திலீப் யோகி, திருமதி. பாலசிங்கம், அன்ரன் பாலசிங்கம், மூர்த்தி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# பின்னால்

இன்று இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் பற்றி பலவிதமான யூகங்களையும் அபிப்பிராயங்களையும் பலர் எழுப்பிய வண்ணம் உள்ளனர். அவற்றைக் கோவைப்படுத்தி இங்கே தருகிறோம். பேச்சு வார்த்தைகளின் பின்னால் அடிபடும் இப் பலதரப்பட்ட அபிப்பிராயங்களையும் யூகங்களையும் கொண்டு வாசகர்களே அவற்றின் தாற்ப்பரியங்கள் பற்றியும் உண்மை பொய்மை பற்றியும் ஒரு முடிவுக்கு வரலாம்.

பேச்சுவார்த்தைக்கு புலிகள் திடீர் என இறங்கியதற்குரிய காரணம் பற்றி சண்டே ஐலண்ட் பின்வருமாறு தெரிவிக்கிறது. ''இவர்கள் இந்திய அமைதிப்படையால் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளதால் அவர்கள் தம்மை மீண்டும் சுதாரித்துக் கொள்வதற்கு காலம் தேவைப்படுகிறது. அந்தக் காலத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே இவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளனர். அத்தோடு இவர்கள் மேலும் தாமதித்தால் இவர்களுக்கு எதிராக இருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ் போன்றவர்கள் தம்மை பலப்படுத்திக் கொண்டு இவர்களின் முக்கியத்துவத்தையே போக்கடித்துவிடலாம். ஆகவே முக்கியத்துவம் இருக்கும்போதே பேச்சு வார்த்தைகள் வைத்துக்கொள்வது பேரம் பேசுவதற்கு இவர்களுக்கு துணை புரியும் என்பதால் இவர்கள் இதற்கு உடன்பட்டிருக்கலாம்.

சண்டே ரைம்ஸ் இப்பேச்சுவார்த்தைக்கு புலிகள் இணங்கியதற்குரிய காரணத்தை இன்னோர் கோணத்தில் பார்க்கிறது. அண்மையில் நடந்த வெலிஓயா தாக்குதலுக்குப் பின்னர் அரசாங்கம் இரண்டாம் தரமாக எல். ரி. ரி. ஈ. இயக்கத்தை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. ஆனால் இம்முறை அதன் அழைப்பில் எதுவித முன்நிபந்தனையும் எல். ரி. ரி. ஈ யிடம் கோரப்படவில்லை. ஆகவே இதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஒப்புதல் கொடுத்தனர். அத்தோடு இந்த உடன்பாட்டை பலப்படுத்துவதற்கு அவர்களுக்கு இன்னும் பலமான காரணங்கள் உண்டு. தற்போது ஜனாதிபதியாக இருக்கும் பிரேமதாசா முன்னைய ஜனாதிபதி செய்து கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தவர். அத்தகைய ஒருவரோடு பேச்சுவார்த்தைக்குப் போவதன் மூலம், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருக்கம் ஏற்படாது வரம் பொன்றை கட்டியெழுப்புவது இலகு. மேலும் ஆரம்பத்தில் மாகாண சபைகளுக்கு கொடுக்கப்படாது இருந்த அதிகாரப்பகிர்வு பற்றி பிரேமதாசா அக்கறை கொண்டது இந்தியாவோடு அவரைச் சாரச் செய்து விடும் என்று புலிகளை எண்ணவைத்திருக்கலாம். ஆகவே பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி இரண்டாம் தடவையாக நிபந்தனையற்ற அழைப்பு விடுத்ததை அவர்கள் தவறவிட விரும்பவில்லை.

பேச்சுவார்த்தை சம்பந்தமாக சிறிமாவோ (ஏப்பிறில் 30) சண்டே ரைம்ஸ்ஸுக்கு பின்வருமாறு கூறியுள்ளார்: ''இந்தப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாகவும் பலன் தரக்கூடிய விதத்திலும் அமைய வேண்டுமென நான் எதிர் பார்க்கிறேன். ஆனால் அரசாங்கம் புலிகளோடு பேச்சுவார்த்தை நடாத்தும் அதேநேரத்தில் ஜே. வி. பி. யையும் அழைத்துள்ளது. வேடிக்கை என்னவென்றால் எல்.ரி.ரி.ஈ. வட கிழக்கு மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரப் பரவலாக்கம் போதாதென்று சொல்கிறது. ஜே. வி. பி.யோ மாகாண சபைகளையே கலைத்துவிட வேண்டும் என்று நிற்கிறது. இரண்டு போக்குகளை அரசாங்கம் எப்படி இணைக்க போகிறது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளதன் காரணத்தை ஈ. பி. ஆர். எல். எவ். ஐச்சேர்ந்த ரஞ்சன் என்பவர் இப்படிக் கூறுகிறார்: இந்தியப்படையின் தாக்குதலால் புலிகள் மிகப்பலவீனப்பட்டுபோயுள்ளனர். ஆகவே அவர்களின் கீழ்மட்டப்போராளிகளின் விரக்தியையும் வெறுப்பையும் போக்குவதற்காகவே இப்படி தாம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாகக் காட்டிக்கொள்கின்றனர். அத்தோடு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு சிக்கலைத் தோற்றுவிக்கவும் அவர்கள் முனைகிறார்கள். ஆனால் இது சரிவரப்போவதில்லை. புலிகள் தமது ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு ஜனநாயக ரீதியில் இயங்க வந்தால் மட்டுமே அவர்கள் பேச்சுவார்த்தையை நாம் வரவேற்போம்.

ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த பாலகுமார் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் ''விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்கியது எமக்கு ஆச்சரியமான செய்தியாகவே வந்துள்ளது. ஆனால் நாம் அதை வரவேற்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தை சிங்கள மக்கள், அரசியல் கட்சிகள், ஜே. வி. பி. போன்ற குழுக்கள் சகலரும் இருகைகளாலும் இறுகப்பற்றி வரவேற்க வேண்டும். பேச்சுவார்த்தை தோற்காமல் செய்வதற்கு அவர்கள் உதவவேண்டும். இது தோல்வியடைந்தால் நாடு பிளவதற்கான போராட்டமே தொடரும். தவிர்க்க முடியாதவகையில் ஏனைய தமிழ்க்குழுக்களும் இதில் சேரவேண்டி வந்துவிடும்.

## 'முடி'யின் மூலம் கண்டுபிடிப்பு

ஒரே ஒரு தலைமுடியை கொண்டுகுற்றவாளியைகண்டு பிடித்து விட முடியும். ஆம்! 'ஆஸ்திரிய' நாட்டு விஞ்ஞானிகள் சுமார் 30,000 வரையிலான மனித தலை முடிகளை ஆராய்ச்சி செய்த பின்னரே இது தெரியவந்தது. ஒருவனின் கைரேகைகளை கொண்டு அவனை கண்டுபிடிப்பதுபோல, 'தலை முடியையும்' வைத்து அடையாளம் காணலாமாம்! விஷேசம் என்னவென்றால், தலை முடியின் சொந்தக்காரனை மட்டுமன்றி அவனின் பெற்றோரையும் கண்டுபிடித்துவிடலாம் என்பதே.

மாவீரன் 'நெப்போலியன்' இறந்து பல காலங்களுக்குப் பின், அவனது 'தலை முடி'யை எடுத்து ஆராய்ந்து பார்த்த போது அவன் விஷம் கொடுத்தே கொல்லப்பட்டான் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்!

— செ. தயாபரன்

## தேர்ந்தெடுக்கப்பட்ட சில

# தேசிய இனப் போராட்டங்கள் - 4

## அயர்லாந்து

**அயர்லாந்து மக்களின் விடுதலைப் போராட்டம் இன்றைய தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தோடு பலவகைகளில் ஒத்திருப்பதை வாசகர்கள் கண்டுகொள்ளலாம்.**

— ஆர்.

அயர்லாந்து பிரித்தானியாவுடன் இணைக்கப்பட்டு ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகளாகப் பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் இருந்துள்ளபோதிலும், ஐரிஸ் மக்கள் தாம் பிரித்தானியாவின் ஒரு பகுதியினர் அல்லவென்று அதிலிருந்து பிரிந்து சென்று தனியரசு அமைத்த பிரச்சினையே ஐரிஸ் பிரச்சினையாகும். பிரித்தானியாவுக்கு மேற்கே ஐம்பது மைல் தூரத்தில் அமைந்துள்ள ஒரு தீவாக அயர்லாந்து காணப்படுகின்றது. அயர்லாந்து இன்று வட அயர்லாந்து என்றும், தென் அயர்லாந்து என்றும் இருபிரிவுகளாக அமைந்துள்ளன. வட அயர்லாந்து தொடர்ந்தும் பிரித்தானியாவின் கீழான ஒரு பகுதியாகக் காணப்பட, தென் அயர்லாந்து சுதந்திரம் அடைந்து அயர்லாந்துக்குடியரசு என்ற பெயரிற் காணப்படுகின்றது. அயர்லாந்துத் தீவின் மொத்த நிலப்பரப்பு 32062 ச. மைல்கள். மொத்த சனத்தொகை 45,00,000 பேரைக் கொண்டுள்ளது (1971ஆம் ஆண்டுப் புள்ளி விபரப்படி). இதில் அயர்லாந்துக் குடியரசின் பரப்பளவு 26, 600 ச. மைல்கள்; சனத்தொகை 30,00000 பேர். வட அயர்லாந்தின் பரப்பளவு 5462 ச. மைல். சனத்தொகை 15,00,000 பேர்.

இங்கிலாந்து அயர்லாந்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பின் மூலம் கி.பி. 1170ஆம் ஆண்டு, இங்கிலாந்து அயர்லாந்தைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. ஆங்கிலேயக் குடியேற்றங்கள் அயர்லாந்துக்குள் நிகழத் தொடங்கின. ஐரிஸ் மக்களின் தாய்மொழி கைவிடப்பட்டு ஆங்கிலம் உத்தியோக மொழியாக்கப்பட்டது. ஐரிஸ் மக்கள் கத்தோலிக்கராய் இருக்க, ஆங்கிலேயர் அங்கு புரட்டஸ்தாந்திய மதத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பிரித்தானியாவுடன் தாம் இணைந்திருக்கக்கூடாதென்ற உணர்வு, காலத்துக்குக் காலம் ஐரிஸ் மக்களிடம் இருந்துள்ளபோதிலும், குறிப்பாகப் 19ஆம் நூற்றாண்டில் பிரிந்து செல்லவேண்டும் என்ற எண்ணம் ஓரளவு வளர்ந்து வந்தது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின்ஆரம்பத்திலும் பொதுவாக மூன்று வகையான கருத்துக்களையுடைய அரசியற்தாபனங்கள் ஐரிஸ் மக்கள் மத்தியிற் காணப்பட்டன. ஒன்று பிரித்தானியாவுடன் இணைந்திருக்கவேண்டுமென்ற ஐக்கிய வாதிகள், (Unionists) இரண்டு சுயாட்சி வாதிகள் (Home Rule Party) மூன்று குடியரசு வாதிகள். (Republicans)

சுயாட்சி மசோதா (Home Rule Bill) 1885 ஆம் ஆண்டு பிரபுக்கள் சபையிலும் தோற்கடிக்கப்பட்டது. இம்மசோதா தோல்வியடைந்தமை ஐரிஸ் குடியரசு வாதிகள் பலம் பெறக்காரணமாக அமைந்தது. 1914 இல் Home Rule act கொண்டுவரப்பட்ட போதிலும் அயர்லாந்தின் குடியரசு வாதிகள் பலம் பெற்றுவிட்டனர். குடியரசு வாதிகள் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபடத் தொடங்கினர். 1916 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி அடக்கப்பட்டு 15 தலைவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. பின்பு 1918ஆம் ஆண்டு பிரித்தானிய பொது மக்கள் சபைக்கான தேர்தலில் அயர்லாந்தில் உள்ள 105ஆசனங்களில் 73 ஆசனங்களைக் குடியரசுவாதிகள் வெற்றியீட்டினர். 26 ஆசனங்கள் ஐக்கிய வாதிகட்கும், 6 ஆசனங்கள் சுயாட்சி வாதிகளுக்கும் கிடைத்தன. குடியரசு வாதிகள், பிரித்தானியப் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து டி வலெரா (De Valera) என்பவரை ஜனாதிபதியாகக் கொண்ட அயர்லாந்துக் குடியரசைப் பிரகடனப்படுத்தினர். ஆங்கில அரசு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டது, குடியரசு வாதிகளும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டனர். (1919–21 Anglo Irish war) 'அங்கலோ அயரிஷ் வோர்! என வர்ணிக்கப்பட்ட போர் நிகழ்ந்தது.




குடியரசு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கெரில்லாப் போராட்டங்களில் ஈடுபட்டனர். 15 முதல் 20 வரையிலான போராளிகளைக் கொண்ட குழுக்கள் ஒவ்வொரு கெரில்லாத் தாக்குதலின் போதும் ஈடுபட்டன. ஒளித்திருந்து அரச படைகளை நாசம் செய்தல், அரசின் நிர்

### சர்வதேசி

வாக யந்திரங்களைத் தகர்த்தல், அரச படைகளின் தொடர்பு சாதனங்களை, அவர்களின் உணவு விநியோகங்களை இல்லாமல் செய்தல் போன்றவை இத்தாக்குதலின் போது இடம் பெற்றன. இது அரசுக்கு அச்சத்தையும், தலையிடியையும் கொடுத்ததால் குடியரசு வாதிகளைப் பேச்சுக்கு வருமாறு அரசாங்கம் அழைத்தது. குடியரசு வாதிகளும் சம்மதம் தெரிவித்தனர்.

அரசாங்கத்தோடான பேச்சுவார்த்தையில் ஆர்தர் கிரிபித், மைக்கேல் கொலின்ஸ் போன்றோர் கலந்து கொண்டனர். இவர்களுள் மிகத் தீவிரவாதியான டி வலெராவும் பேச்சுவார்த்தையில் பங்கெடுத்துக் கொண்டார்.

பேச்சு வார்த்தையின் பெறுபேறுகள் பின்வருமாறு அமைந்தன. அயலாந்துக்கு முழுமொத்தமான விடுதலை தரமுடியாதென்றும் வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தினரே அதிகப்படியாக உள்ளதால் அது பிரித்தானியாவின் ஆதிக்கத்தின் கீழேயே இருக்கவேண்டுமென்றும் அதே நேரம் தென் அயர்லாந்துக்கு பிரித்தானியாவின் முடிக்குக் கீழ் விடுதலை வழங்கச் சம்மதம் என்றும் அரசு தரப்பினர் அறிவித்தனர். இதுவே அரசின் பிரபலம் வாய்ந்த 'அயரிஷ் ஃபிறி ஸ்ரேற் (Irish Free State) அமைப்பாகும். இந்த அமைப்பின்படி, அயர்லாந்து வடக்கு, தெற்கு என இரண்டாகத் துண்டாடப்படுவதையும் அத்தோடு மேலும் பிரித்தானிய ராணுவத்தளங்கள் அகற்றப்படாமல் இருக்கும் என்பதையும் டி வலெராவின் தலைமையிலான குடியரசு வாதிகளின் குழுவொன்று கடுமையாக எதிர்த்து நின்றது. அதேவேளை மைக்கேல் கொலின்ஸ், ஆர்தர் கிரிபித் போன்றோர் அயர்லாந்து சுயாட்சித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமென்று கூறினர். இறுதியில் குடியரசுவாதிகளின் பெரும்பான்மையோரால் 'அயறிஷ் ஃபிறி ஸ்ரேற்' திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கிரிபித், மக்கேல் கொலின்ஸ் என்போரால் கைச்சாத்திடப்பட்டது. இதன் பயனாக 1922இல் 'அயறிஷ் ஃபிறி ஸ்ரேற்' என்ற பேரில் தென் அயர்லாந்தில் கொலின்ஸ், கிரிபித் தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டபோது, வட அயர்லாந்து — (Ulster) அல்ஸ்ரர் பிரித்தானியாவோடு சேர்க்கப்பட்டது. ஆனால் இப்படி வடக்கு-தெற்கு என்று அயர்லாந்து பிரிக்கப்பட்டதையும் அயறிஷ் ஃபிறி ஸ்ரேற்றையும் டிவலெராவின் தலைமையிலான குடியரசு வாதிகள் கடுமையாக எதிர்த்து போராட்டத்தில் குதித்தனர். அயர்லாந்து குடியரசு ராணுவத்தின் (IRA) ஒரு பகுதியினர் புதிய அரசாங்கத்தின் உத்தியோக பூர்வமான ராணுவமாகினர். மறு பகுதியினர் இதை எதிர்த்து ஆயுதம் தாங்கிப் போராடினர். இதுவே பிரசித்தி பெற்ற (1922 – 23) அயர்லாந்து உள்நாட்டுப் போராகும்.

நாட்டு விடுதலைக்காக ஒன்றாக இணைந்து தோளோடு தோள் போட்டுப் போராடியவர்கள், இரு குழுக்களாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் கொல்வதில் ஈடுபட்டனர். இந்த உள்நாட்டுப் போரில், எதிர்ப்புக் குழுவினர் தோல்வி கண்டபோதும் அவர்கள் தம் விடுதலை வேட்கையைக் கைவிடவில்லை. இதற்கிடையில் ஆட்சியிலிருந்த கொலின்ஸ், கிரிபித் போன்றவர்கள் மரணமடைந்தனர். முன்னவர் குண்டெறிக்கு இலக்காகி இறக்க நேர்ந்தது.

1932இல் டிவலெரா அயர்லாந்தின் பிரதமரானார். அவர் 1948 வரை தொடர்ந்து பிரதமராய் இருந்தார். இக்காலப் பகுதியில் பிரித்தானிய அரசுக்கு விசுவாசம் செலுத்துதல், நீக்கப்பட்டது. அயர்லாந்தில் இருந்த பிரித்தானிய தளங்கள் அகற்றப்பட்டன. இறுதியில் 1948 இல் அயர்லாந்து ஃபிறி ஸ்ரேற் என்பதை நீக்கி அயர்லாந்து குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டது.

டிவலெரா ஆட்சியிலிருந்த காலத்திலும் ஐ. ஆர். ஏ. (I R A) கிளர்ச்சிப் படை எதிர்த்தும் போராடியது. ஆனால் 1948இன் குடியரசு பிரகடனத்தின் பின்னர் அயர்லாந்து அரசுக்கெதிரான தனது போராட்டத்தை விடுத்து, தென் அயர்லாந்தையும் வட அயர்லாந்தையும் (Ulster) இணைப்பதற்கான போராட்டத்தை ஐ. ஆர். ஏ. தொடங்கியது. இந்நிலையில் இவ்வட அயர்லாந்துப் பிரச்சினை இன்று வரை தொடர்ந்து நீடிக்கும் பிரச்சினையாகவே மாறியுள்ளது. □

---

# பயணம்

இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் இந்நூற்றாண்டு முழுவதின் அரசியல் வரலாற்றையும் நோக்கும்போது அரசியலில் அறிவுத்துறையின் வளர்ச்சி போதியளவு ஏற்படவில்லையென்பது தெளிவு. சமூகமுன்னேற்றத்திற்கு, சரியான அரசியற் தீர்மானங்களை எடுப்பதற்கு அறிவுத்துறையின் வளர்ச்சி அத்தியவசியமானது, துரதிஸ்டவசமாக தமிழ்ப் பகுதிகளில் பல்கலைக்கழகங்கள் அமையாது தென்பகுதிகளில் மட்டும் பல்கலைக்கழகங்கள் அமைந்திருந்தமையால் தமிழ்ப பிரதேசம் சார்ந்த சிந்தனை, தமிழ்த் தேசியம் சார்ந்த சிந்தனைகள் என்பன புறக்கணிக்கப்பட்டு, வளரமுடியாமற் போயின. 1970களின் மத்தியில் யாழ்ப்பாண வளாகம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு சிறு மாற்றம் இதில் ஏற்படத் தொடங்கியது. இது ஒரு குழந்தைப் பராயத்தைக் , கொண்ட பல்கலைக்கழகம் என்ற வகையில் இதனால் அரசியல் அறிவுத்துறையில் பரந்தளவில் பெரும் சாதனைகளைச் செய்யமுடியாது போனாலும் மாணவர்கள் தமது சக்திக்கெட்டியவரை அரசியலில் மிகப்பெரும் ஈடுபாடு காட்டியுள்ளனர். கடந்த 15ஆண்டுகளில் வெகுஜனப் போராட்டங்களை முன்னின்று நடத்துவதிலும் பல்கலைக்கழக மாணவர்கள் பெரும்பணியாற்றியுள்ளனர். இவ்வாறு போராடும் மாணவர் மத்தியிலிருந்து ஒருசாரார் அரசியலின் அறிவுத்துறையின் அத்தியாவசியத்தை அதிகம் உணரத் தலைப்பட்டனர். அவ்வாறானவர்களில் ஒருவரே காலஞ்சென்ற சி.பிரபாகரன் ஆவார்.

"அரசியலை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு வரலாற்றறிவு மிக அவசியம்" என எப்பொழுதும் கூறுவார். இந்தவகையில் வரலாற்றை தனது படிப்பு நெறியாகத் தெரிவுசெய்து ஆர்வத்துடன் கற்றுவந்தார். அத்

### ஜெயரட்ணம்

துடன் இந்த அடிப்படையில் தனது நண்பர்களையும், ஊரவர்களையும் வரலாறு படிக்குமாறு தூண்டினார். இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் வரலாறு கற்கும் பெரும்பாலான ஆண்கள் இவரது ஆலோசனையினாலும் இவர் ஏற்படுத்திய ஆர்வத்தினாலும் தூண்டப்பட்டவர்களாவர்.

"சர்வதேச அரசியலை விளங்கிக் கொள்ளாமல் உள்நாட்டு அரசியலில் ஒரு துரும்பைத்தானும் விளங்கமுடியாது" என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார், இதனால் சர்வதேச உறவு, சர்வதேச அரசியல் என்பனவற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். குறிப்பாக நேட்டோ அணி, வார்சோ அணி தென்னாசிய அரசியல் என்பவற்றில் அக்கறை செலுத்தி அவற்றில் பரந்த அறிவைப் பெற்றிருந்தார்.

இம்மாதம் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு கனடா சென்று அங்கு சர்வதேச உறவு எனும் துறையில் முதுகலைமானி பட்டம் பயில்வதாகத் திட்டமிட்டிருந்தார். 'திபெத்தியப் பிரச்சினையும் சீன இந்திய உறவும்' எனும் தலைப்பில் முதுகலைமானி செய்வது சிறந்ததென எண்ணியிருந்தார் தனது படிப்பை முடித்து நாடு திரும்பி ஓர்அரசியல்ஆராய்ச்சி மையத்தை தோற்றுவித்து சிறந்த நூல்களை வெளியிட வேண்டுமென எண்ணியிருந்தார்.

இவர் சிறந்த நூல்களை வாங்கிச் சேகரிப்பதிலும் அவற்றைப் படிப்பதிலும் அதிக அக்கறை செலுத்தினர். இந்த வகையில் சொந்தமாக ஒரு நூலகத்தை உருவாக்கி வந்தார். கிரேக்க சிந்தனை தொடக்கம் தற்போதைய சர்வதேச அரசியல் ஈறான பல சிறந்த நூல்களை இவர் சேகரித்து வைத்துள்ளார். மாணவனாக இருந்து கொண்டு இப்படி தனது சொந்தச்செலவில் இவ்வாறு நூல்களை வாங்குவதென்பது மிகக்கடினமான காரியம் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

(11ஆம் பக்கம் பார்க்க)



3-5-89 புதன்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கண்டபடி கைதுசெய்யப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது, கொலை செய்யப்படுவது ஆகிய விடயங்களை முன்வைத்து ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்□ காலை 6-30 மணிபோல் கைதடிச் சந்தி அமைதிப்படை முகாம் மீது கிரனேட் வீசக இடம்பெற்றது. இச் சம்பவத்தை அறியாது அந்த வழியால் வந்த பஸ் பயணிகள் தாக்கப்பட்டதில் 7 பேர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்□ பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை ஓராங்கட்டையடியில் மோதல் இடம்பெற்றது. இதில் 8 ஜவான்களும் 1 விடுதலைப்புலியும் இறந்தனர். கடைகள் எரிக்கப்பட்டதோடு பொதுமக்கள் தாக்கப்பட்டனர், 8 பொதுமக்களும் கொல்லப்பட்டனர் □ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களான யோகி, மூர்த்தி ஆகியோர் தமது ஏழு மெய்க்காப்பாளர்களுடன் சிறீலங்கா விமானப்படை ஹெலிகொப்ரரில் கொழும்பு சென்றடைந்தனர் □

4-5-89 வியாழன்

விடுதலைப் புலிகளின் குழு தங்கியிருந்த ஹொட்டேலுக்கு திடீரென ஜனாதிபதி விஜயம் செய்தார். பின்னர் ஜனாதிபதியின் சுசரித்த இல்லத்தில் புலிகளின் குழு அவரைச் சந்தித்தது□ காலை ஹொரணை பொலிஸ் நிலையத்தை ஜே. வி. பி. யினர் தாக்கியதில் ஒரு உதவி இன்ஸ்பெக்டர் காயமடைந்தார்□ வடமராட்சிப் பகுதிகளில் திடீர் திடீரென வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன□ காலை புலோப்பளைப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகமும், குண்டுவெடிப்பும் நிகழ்ந்தன. மூன்று படையினர் காயமடைந்தனர்□ சகல திணைக்களங்களிலும் தமிழ் மொழி அமுலுக்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவென்று பொது நிர்வாக ராஜாங்க அமைச்சர் சந்திரா பண்டார தெரிவித்தார் □

5-5-89 வெள்ளி

தென் மாகாணத்தில் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் ஹர்த்தால் நடைபெற்றது. ஜே. வி. பி. யினர் இதற்கு அழைப்பு விடுத்திருந்தனர் □ குரும்பசிட்டிக்கும் ஏழாலைக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது □ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும், இலங்கை அரசு அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது □ யாழ். பல்கலைக்கழக மாணவன் ஜெகதீஸ்வரனை விடுதலை செய்யுமாறு அமைதிப்படையினரிடம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது□ பொலன்னறுவை மாவட்டத்தில் இடம்பெற்ற சிலிண்டர் தாக்குதலில் 3 பொலிசார் இறந்தனர். 6 பொலிசார் காயமடைந்தனர் □ இந்திய அரசினால் அன்மையில் வழங்கப்பட்ட பஸ் நீர்வேலியில் இளைஞர் கோஷ்டியால் தீக்கிரையாக்கப்பட்டது□

6-5-89 சனி

கொக்குவிலில் புதிய இந்திய பஸ் தீக்கிரையாக்கப்பட்டது. இது சமீபத்தில் இந்திய அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும்□ கல்வியங்காட்டுச் சந்தியில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சுட்டுக் கொல்லப்பட்டனர்□ யாழ்.அரச அதிபர் மு.பஞ்சலிங்கத்தின் இறுதிக் கிரிகைகள் ஆனைக்கோட்டையில் நடைபெற்றன□ குருநாகல் மாவட்ட யு.என்.பி. எம். பி. யான பியசோம உபாலி மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர் காயமின்றித் தப்பினார்□ மீசாலை ரயில் நிலையத்தில் அமைதிப்படை ஜவான் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர் படுகாயமடைந்தார்□

7-5-89 ஞாயிறு

இலங்கை இராணுவ அணியொன்று நேற்று குடாநாட்டைவிட்டு தரைமார்க்கமாக வெளியேறியது□ சரசாலையில் நிகழ்ந்த மோதலில் அமைதிப்படை ஜவான் ஒருவர் கொல்லப்பட்டார்□ மூவர்கொண்ட பிரித்தானியத் தூதுக்குழு யாழ்.வந்தது□

8-5-89 திங்கள்

ஒரு பைக்கற் சீமெந்தின் விலை 19ரூபாவால் இன்று முதல் அதிகரித்தது□ யாழ். நகருக்கு வந்துள்ள பிரித்தானியத் தூதுக்குழுவினர் ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்□ திடீர் ஷெல் தாக்குதல்கள் நிகழ்வதால் உருத்திரபுரம், சிவநகர், கனகபுரம் பகுதி மக்கள் அச்சங்கொண்டு வெளியேறுகின்றனர்□

9-5-89 செவ்வாய்

நெல்லியடிப் பிரஜைகள்குழு முன்னாள் தலைவரும், சட்டத்தரணியுமான வ.மகாலிங்கம் (65) இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்□ புங்குடுதீவில் சி.கந்தவேள் என்ற இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டார்□ வல்வெட்டித்துறை நகரில் காலை, மக்களில் பலர் தாக்குதலுக்குள்ளாகினர்□

# சிறுவர்க்கு அநியாயம்!

*''என்பிலதனை வெயில்போலக் காயுமே*
*அன்பிலதனை அறம்''*

— குறள்

பெண் உரிமைபேசும் அமெரிக்க நாட்டில் ஆண்டுதோறும் 18 லட்சம் பெண்கள் கணவர்மாரால் அடித்து நொறுக்கப்படுகிறார்கள். 25% மணங்களில் ஹிம்சை இடம்பெறுகிறது. அவசர சத்திரசிகிச்சைக்கு வரும் பெண்களில் 20% பேர் வீட்டினுள் துன்புறுத்திக் காயமடைந்தவர்கள், 1986 இல் துன்புறுத்தப்பட்ட சிறுவர் வழக்குகள் 20 லட்சம். 1976 இல் இத்தொகை 669, 000 மட்டுமே. ஆண்டுதோறும் 1200 குழந்தைகள் துன்புறுத்தப்பட்டும் பராமரிப்பின்றி விடப்பட்டும் மரணிக்கிறார்கள். தாம் சிறுவராயிருக்கும்போது ஹிம்சைக்குள்ளானவர்கள் பெற்றோர்களாகிய போது தமது பிள்ளைகளை ஆறுமடங்கு அதிகம் துன்புறுத்துகிறார்கள். வீட்டினுள் துன்புறுத்தப்படும் சம்பவங்களில் 40% மது அல்லது போதைவஸ்துக் காரணமாக நிகழ்பவை.

இதுதான் உலகுக்கு நாகரிகம் போதித்து வழிகாட்ட முயலும் அமெரிக்காவின் குடும்ப வாழ்க்கை. உங்களால் நினைத்துப்பார்க்க முடிகிறதா? அன்பு என்ற நார் இல்லாமல் இல்வாழ்க்கை என்ற பூமாலை இல்லை. குடும்பம் என்பது தேவையற்ற ஒரு சமூக அமைப்பு. விவாகங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன; குழந்தைச் செல்வம் இறைவன் தந்த அருட்கொடை என்றெல்லாம் பேசுவது பத்தாம் பசலிக் கொள்கைகள் என்று விதண்டா வாதம் பேசுவோர், இந்தக் காட்டு மிராண்டி நிலைக்கு என்ன விளக்கம் சொல்வார்களோ ?

— ஆ. ச.

## திக்கு. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணவு முத்திரையோ, ஜனசவிய பத்திரமோ, உலக வங்கியைப் பொறுத்தவரை, இரண்டும் ஒன்றுதான், இரண்டுமே வெளிநாட்டுப் பிச்சையைநாடி நிற்பவை.

ஜனசவிய திட்டம் வெறும் பிச்சைக் கொடுப்பனவாகவில்லாது, உழைப்பையும் வேலையையும் சார்ந்ததாய் இருப்பின், அதற்கு வேண்டிய நிதியினை வழங்குவதுபற்றி ஆலோசிக்கலாமென சர்வதேச நாணய நிதியமும். உலக வங்கியும் கூறியிருக்கின்றன.

கேட்கக் கேட்க, இந்த முதலாளித்துவ நிறுவனங்கள் (இந்த வர்க்கச் சார்பை மறைக்க இந்நிறுவனங்கள் ''சர்வதேச'', 'உலக' என்ற அடைமொழிகளைப் பூணுகின்றன ) வாரி வழங்கும் என்று நினைத்த எமது அரசாங்கம்தான் 'பேயனாகப்' போகின்றது.

கடனையும், வட்டியையும் திருப்பிக் கொடுக்க வக்கற்றவனுக்கு, யார்தான் மீண்டும் மீண்டும் கடன் வழங்குவார்கள்?

## பிரளயம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலை தெரியும்போது கர்ப்பத்தின் நெடி வீசுவதைப் போல மண் வாசமிடுகிறது. ஈரத்தில் ஊறிக் கிடந்து வெளியேறி வரும் அதைக் கைகளால் அள்ளிக் கொள்வது ஆனந்தம்.

போன விளைச்சலின் நினைவுகளாய் பயிர்க்கால்கள் நிற்கின்றன. வளர்ச்சி நியதியின்படி அதன் நடுவில் அங்கங்கே பசுமையுடன் சிலது உயிர்த்தெழுகிறது. இயற்கையைப் புதுப்பிக்கவும், உயிர்ப்பிக்கவும் ஏர்க்கால்கள் அவற்றைப் புரட்டிப் போடுகிறது. யாவும் மண்ணுக்குள் மறைகின்றன. வெட்டவெளி. அங்கே லேசான ஈரம் கலந்த வாசனையைத் தவிர வேறேதும் இல்லை. அந்தக் கோடுகள் தனித்தனியே நிலவுவதைப் போல தோற்றமளிக்கிறது. ஒன்றையொன்று தொடாததைப் போல் காணப்படுகிறது. அவை தங்களுக்குள் பேசி முடிவாகி ஒரு வரையறையை, ஒரு எல்லையை உருவாக்கிக் கொண்டதாய் நடிக்கின்றன. இது பார்வைக்கு சாத்தியமாய் இருக்கிறது. ஆனால்பார்வைகள் நம்மை எத்தனை முறை ஏமாற்றியிருக்கின்றன ! உண்மையில் அவைகளை நம்புவதற்கில்லை. பார்வையை விட மனசை நம்பலாம். பார்வையில் படாத விஷயம் மனசில் படுகிறது. இதையும்விட சீக்கரத்தில் விழிகள் அழாத நேரத்திலும் மனசு அழுகிறது. அழுது ஆத்மாவையே விழிக்கச் செய்கிறது. மனசை நம்பலாம்.

அந்திநேரம். எல்லாமும் புரண்டு கிடக்கிறது. யாவும் அழிந்து போயின. வெட்டவெளி. எல்லாமும் புரண்டதற்கு அடையாளமாக மண்வாசனை வருகிறது. ஈரம் காய்ந்துவிடவில்லை. மேடு-பள்ளம்; - மேடு - பள்ளம். ஆதவனைக் காணவில்லை. நிலவும் அப்படியே, நட்சத்திரங்களும் விதிவிலக்கல்ல. இவை மீண்டும் தோன்றிவர நீண்ட நேரமாகும். இருளும் ஒளியும் கலந்தே காண்கிறது. உண்மையைச் சொல்வதானால் அவை கலவியில் லயித்திருக்கின்றன. இனி மெல்ல மெல்ல மாற்றங்கள் இடம் பெறலாகும்.

அதுமட்டும் அமைதி.
மாடு நிற்கிறது.
அதன் பதி நிற்கிறான்.

அவை இரண்டையும் பற்றி நின்று தன் இயல்பு மாறாமல் மேல் கீழாகவும் கீழ் மேலாகவும் மாறும்படி கிழித்துப் போட்ட அது நிற்கிறது.

— இரா. சோமசுந்தரம்
நன்றி : கணையாழி □

## சந்திரனின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த சில நிமிடங்களில் இறுகிப் பலமடைந்து விடும்.

மண்கலக்க நீரைப் பெற சில கருத்துக்களையும் ஆய்வாளர்கள் தந்துள்ளனர்.

சந்திரக்கற்கள் 'இல்மனைற்' கனிப்பொருளுடையவை. இவ் இல்மனைற்றை ஐதரசன் வாயுவினால் சூடேற்ற நீர் கிடைக்கும் சூரிய ஒளியின் சில மூலக்கூறுகள் ஐதரசனை உருவாக்கும்.

சுவாசிப்பதற்கு ஒக்சிசன் தேவை. இதற்கும் இல்மனைற்றைச் சூடாக்கவேண்டும். ஒரு கிலோ எரிபொருளினால் சூடாக்கினால் 100 கிராம் அளவு ஒக்சிசன் கிடைக்கும்.

உண்ண உணவு வேண்டும். சந்திரனில் காபனீரொட்சைட் சாதாரணமாக உள்ளது. தாவரங்கள் சுவாசிக்க இதுபோதும். மேற்கூறியவாறு நீரைப்பெறலாம். ரஷ்யாவில் சந்திரமண்ணில் வளர்த்த தாவரங்கள், பூமியில் வளர்ந்ததை விடச் சிறப்பாக இருந்ததாம்.

மின்சாரத்தைப் பெற சூரியக் கலங்களை பயன்படுத்தலாம்,

இத்தகைய முறையில் ஆய்வுத் தளத்தை அமைக்க திட்டமிட்டுள்ள ரஷ்யா லூனா—9, லூனா—13 கலங்களை அனுப்பி சாதகமான தகவல்களைப் பெற்றுள்ளது.

தற்போது ரஷ்யா சந்திரனிற்கு இலகுவாக பயணிக்கத்தக்க வகையில், கலங்களை வடிவமைக்கத் தொடங்கியுள்ளது.

கி. பி. 2000 ஆண்டினுள் எமது ஆய்வுத்தளத்தை அமைத்துவிடுவோம் என, ரஷ்யர்கள் கூறுகின்றனர்.

இதையே அமெரிக்கரும் கூறுகின்றனர்.

பார்ப்போம் யார் முதலில் அமைக்கின்றார்கள் என்று ? யார் அமைத்தாலும் இது மனுக்குலத்தின் வளர்ச்சிக்கு உதவும் தன்மையதே.

நி. தவபாலன்
ஆதாரம்: ஸ்புட்னிக், சயன்ரி ஃபிக் அமெரிக்கன்.

## பயணம்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு ஒன்று மட்டும் தெளிவு. சமூக நேசிப்புடன் உருவாகியிருந்த ஒரு சிறந்த அறிவாளியை, இத்தனை ஆற்றல் கொண்ட ஓர் இளைஞனை நாம் பறிகொடுத்து விட்டோம். எமது மண்ணுக்கும் வாழ்வுக்கும் உரமூட்டக்கூடிய ஓர் அறிவியல் ஆற்றல் மிக்கவனை துர் அதிஷ்டம்மிக்க எமது அரசியற் சூழல் விழுங்கிவிட்டது.

தனது ஆசிரியர்களை எப்பொழுதும் கனம்பண்ணி வந்தான். இவரது மரணத்தைக் கண்டு பல்கலைக்கழகத்துள் ஒரு பேராசிரியர் வாய்விட்டுக் கதறி அழுதார். இவ்வாறே பல விரிவுரையாளர்கள், மாணவர்கள், மற்றும் ஏனையோரும் கலங்கினர்□

## உரிமைக்கு...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

தின் ஆட்சி! கண்மலர்கள் ஒளியுடன் விரிந்தன; அதரங்கள் ஏதோ சொல்லத் துடித்தன. அதற்கிடையில்........

ஒரு அணுவின் அணுவான விநாடி நேரம்—அவள் தலை சாய்ந்தது. அவள் முகம்மட்டும் புன்னகைப் பொலிவு மாறாமல் அப்படியே இருந்தது!

அவன் இப்போ அழவில்லை! எதுவித உணர்ச்சிகளுமற்று அவளையே பார்த்தபடி நின்றான். என்றாலும் கண்கடைகளில் இரண்டு முத்துக்கள் உருண்டு விழுந்தன. அந்தத் தியாக உரு அவன் மனதில் மூட்டிவிட்ட தியாகத் தீ உள்ளே கனன்று கொண்டிருக்கிறது.

''உரிமைக்காக உயிர்'' அவனுடைய உள்ளத்தில் அவள் நின்று சொல்லிக்கொண்டிருக்கிறாள். □

திசை
THISAI

# ஆலோசனையோ தாராளம் நிதியுதவியோ சந்தேகம்

அண்மையில் உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு நிதி உதவி பெறச் சென்ற உத்தியோகப்பூர்வக் குழு நிதியைப் பொறுத்தவரை வெறுங்கையோடு திரும்பியபோதும், ஆலோசனையைப் பொறுத்தவரை தாராளமாக அதனைப் பெற்று வந்துள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் தேயிலையே இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் இருக்கின்றது.

பிட்சா பாத்திரத்துடன் சென்ற எம்மவரிடம் அதனைச் சுட்டிக் காட்டிய உலக வங்கி (உண்மையில், குறிப்பாக மூன்றும் உலகைப் பொறுத்தவரை உலக விழுங்கி), தோட்டப் பொருளாதாரம் சீராகப்படாவிடின், இலங்கைக்கு வழங்கப்படக் கூடிய சர்வதேச நிதியுதவிப் 'பொட்டலம்' கிடைக்காது போய்விடலாமென எச்சரித்துள்ளது.

இன்று கடன் வாங்கு, பின்னர் திருப்பிக்கட்டு என்ற 'திறந்த' பொருளாதார அமைப்பின் அடிப்படையில் ஜே. ஆர். அரசாங்கம் வெளிநாட்டு நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து தாராளமாக கடனைப் பெற்றது.

இந்த உதவியைக் கொண்டு ஆரம்பத்தில் பணத்தை வீசி பல்வேறு துறைகளில் அபிவிருத்தி நடைபெற்று வருவதாக 'மாயையை' ஏற்படுத்தியது யூ. என். பி. அரசு.

இன்றோ 'மாயைத் குமிழி'யை யதார்த்தம் என்ற 'ஊசி' குத்தி உடைத்துவிட்டது.

பழைய கடன்களையும் திருப்பிக் கொடுத்தால்தான் மீண்டும் நிதியுதவி வழங்கப்படும் என்கின்றது முதலாளித்துவம் மேலேச்சும் உலக வங்கி.

முதல் பலிக்கிடாய்-தேயிலைப் பெருந்தோட்டங்கள்.

இந்த யதார்த்தங்களைப் பெருந்தோட்ட அமைச்சர் காமினி திசாநாயக்காவிற்கும், பெரும்பான்மை தோட்டத் தொழிலாளர் அமைப்பின் தலைவரான அமைச்சர் தொண்டமானுக்கும் தெரிவித்து, அவர்களது ஒத்துழைப்பை அரசாங்கம் கோரியுள்ளது.

## இசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே"*

### தலைமை

இலங்கையின் அண்மைக் காலவரலாற்றிலும் சரி, முன்னரும் சரி, இலங்கை வாழ் சகல இனமக்களாலும் போற்றப்படக் கூடிய ஒரு தேசியத் தலைவர் உருவாக்கப்பட்டிருக்கிறாரா?

பிரித்தானியா விட்டுச் சென்ற ஒற்றை ஆட்சியின் கீழ் இலங்கையின் பிரதமராக-தற்போது ஜனாதிபதியாக-பதவி வகித்து வந்த, வருகின்ற எந்தச் சிங்களத் தலைமையாவது இதற்குரிய தகுதி பெற்றிருக்கிறதா?

இலங்கையின் முதற் பிரதமராய் இருந்த டி. எஸ். சேனநாயக்கா முதல் இன்று பதவிவகிக்கும் ஜனாதிபதி பிரேமதாச வரை, இத்தகைய ஓர் உயர் நிலைக்கு தம்மை வளர்த்துக் கொள்ளக் கூடியவர்களாய் இருந்தார்களா?

இல்லை, என்றே கூறவேண்டும்.

காரணம், இவர்கள் சாதாரண அரசியல் வாதிகளாய், தேர்தலில் தம்மையும் தம் கட்சியையும் வெற்றி கொள்ள வைக்கும் சாமான்ய அரசியல் லாபந்தேடும் சூழ்ச்சியுடைய பேர்வழிகளாக இருந்துள்ளமையே.

நாடுதழுவிய மக்களின் ஆதரவைப் பெறுவதென்பது இன, மொழி, சுயலாப அரசியல் கடந்த மனிதச் செயல்பாடாகும்.

இந்த மனிதச் செயல்பாடானது தன்மொழியைப் போலவே தனது நாட்டின் ஏனைய மொழிகளையும் நேசிக்கும்.

தன் இனத்தைப் போலவே நாட்டின் ஏனைய இனத்தையும் நேசிக்கும்.

அரசியலில் குறுகிய சுயலாபந்தேடாது. மாறாக, மனிதப் பண்பாட்டின் வடிகாலாகவே அதைப் பயன்படுத்தும்.

ஆப்பிரகாம் லிங்கன் இந்தக் குறுக்கங்களை வென்று நாடு தழுவிய தலைவராய் நிமிர்ந்தவர்.

ஜோன் கென்னடி சிறுபான்மை நீக்ரோக்களை மதித்ததால்தான் அவருக்கும் அந்த மரியாதை.

காந்தியும் அதால்தான் இந்தியாவின் சகல மக்களாலும் போற்றப்படும் தலைவராய் நிற்கிறார்.

இலங்கையிலும் சிங்களத்தலைவர்களுக்கு, இந்த நிலைக்கு உயரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஒவ்வொரு முறையும் அளிக்கப்பட்டுக்கொண்டே வரப்பட்டிருக்கிறது.

ஆனால் எவரும் அதைப் பயன்படுத்தவில்லை. அவர்கள் எவரும் தமது இனம், மொழி, பிரதேசம், அரசியல் என்னும் குறுகிய வட்டங்களை உடைத்துக் கொண்டு 'தமிழ்பேசும் இனமும் தம் நாட்டவரே' என்னும் பேர் எல்லைக்கு தம்மை உயர்த்திக்கொள்ள முயலவில்லை.

டி. எஸ். சேனநாயக்கா குடியேற்றங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு எதிராக இயங்கினார்.

பெரிய மாற்றத்தை இலங்கையில் ஏற்படுத்திய பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தால் இனப்பிரச்சினையை பெரிதாக எரியவைத்தார்.

பெரும் ஆதரவோடு பதவிக்கு வந்த ஜே. ஆர். தமிழ்ப் பிரதேசங்களையே யுத்த பூமி ஆக்கினார்.

தற்போது பதவிக்கு வந்திருக்கும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் தன்னை உயர்த்திக் கொள்ளவும் தாழ்த்திக்கொள்ளவும் சந்தர்ப்பம் திறந்துவிடப்பட்டிருக்கிறது.

இவர் பெருந்தலைவராய் உயர்வாரா? அல்லது தாழ்வாரா?

## ஜே.வி.பி ...

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

எந்த நிபந்தனையுமற்ற வகையில் பூரண ஒழுங்குகள் செய்ய அரசாங்கம் சம்மதித்துள்ளதின் பேரில் பேச்சுவார்த்தைக்கு ஜே. வி. பி யினர் இணங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பி யினரின் இத்திடீர் சம்மதத்தை அறிந்த அரசியல் அவதானிகள் ரோகண விஜயவீர தனது உயிருக்காக தான் பெரிதாகப் பேசிய கொள்கைகளை அடைவு வைக்கத் துணிந்து விட்டாரா? பொருள் முதல்வாத சரித்திர ஓட்டத்தில் பெரும் நம்பிக்கை கொண்டவரெனக் காட்டிக் கொண்ட விஜயவீரா தான் இறந்தால் தன்னைப் போல் வேறொரு தலைவர் சரித்திர ஓட்டத்தால் உருவாக்கப் படலாம் என்பதை மறந்து விட்டாரா? தனது உயிருக்காக கொள்கைகளை விலை பேசும் இவர், எத்தனையோ அப்பாவி உயிர்களைக் கொன்றொழித்த போது இது பற்றிச் சிந்தித்தாரா? என்று கேட்கின்றனர்.

## சட்டத்துறையில் ஒரு சாதனை

ஓரே நாளில் மட்டும் 85 ஆட்கொணர்வு மனு கொழும்பு அப்பீல் நீதிமன்றத்தில் பதியப்பட்டு இலங்கை சட்டத்துறை வரலாற்றிலேயே ஒரு சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சட்டத்துறை வட்டாரங்கள் கூறுகின்றன, இவ்வளவு தொகையில் ஆட் கொணர்வு மனு கடந்த ஏப்பிரில் மாதம் 20ஆம் திகதி பதியப்பட்டுள்ளது.

## மாணவன்...

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இவர் முரசொலி ஆசிரியர் எஸ். திருச்செல்வம் அவர்களின் மகன் என்பது தெரிந்ததே. அவரது மரணம் குறித்து யாழ். மாணவர்கள், ஆசிரியர்கள் வெளியிட்ட அறிக்கையையும், யாழ். மாணவர் இளைஞர் பொதுமன்றம் (Guys) வெளியிட்ட அறிக்கையையும் கீழே தருகிறோம்!

கொலை செய்யப்பட்ட மாணவனுக்கு அஞ்சலியாக மாத்திரமின்றி தொடரும் காலகட்டத்தில் மாணவர் உரிமை மீறப்படாமலிருக்க பின்வரும் கோரிக்கைகளை முன் வைத்து 15. 5. 89 (திங்கள்) தொடக்கம் 19. 5. 89 (வெள்ளி) வரை தொடராக பாடசாலைகளை பகிஸ்கரிக்கும்படி வேண்டுகின்றோம்.

* கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுவிக்கவும்.
* மாணவர் உரிமைகள் பேணப்படவேண்டும்.
* கல்விக் கூடங்களில் ஆயுதந்தரித்தோர் உட்புகுதல் தடைசெய்யப்பட வேண்டும்.
* கொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

—யாழ். மாணவர்கள்,
ஆசிரியர்கள்

அண்மைக்கால மாணவர் உரிமை மீறல் சம்பந்தமாக எமது கண்டனத்தை தெரிவிப்பதோடு, இறந்த மாணவன் தி. அகிலனுக்கு கண்ணீர் அஞ்சலியும் செலுத்துகிறோம்.

—கைஸ்

## ஓவியத்தின் விலை

அண்மையில் பம்பாயில் நடைபெற்ற ஓவிய விற்பனைக் கண் காட்சியொன்றில், இந்தியாவின் பிரபல ஓவியரான எம்.எவ். ஹுசெயின் வரைந்த ஓவியமொன்று பத்துலட்சம் ரூபாவுக்கு விற்பனையானது. இந்தியாவின் கலை வரலாற்றில் ஆகக் கூடிய தொகைக்கு விற்பனையான சமகால ஓவியம் இதுவேயாகும்.

அண்மையில் கொலை செய்யப்பட்ட நாடகக் கலைஞர் சவ்தார் ஹஷ்மியைச் சித்திரிப்பதாக இந்த ஓவியம் அமைந்துள்ளதும், குறிப்பிடத்தக்கது.

## வெளிப்பகுதி...

*(1ஆம் பக்கத் தொடர்ச்சி)*

யே செயற்கையாக உருவாக்கப்பட்ட எல்லைகளை நீக்குவதற்கும், தோட்டப் பகுதிகளிலே குடியேற்றத் திட்டங்களை நிறுவப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

50க்கு 50 என்ற வீதத்தில் இக்குடியேற்றங்கள் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனின் கருத்துப்படி மலையகத் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலே சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இப்பகுதிகளில் 50 வீத சிங்கள மக்கள் இல்லாததினால், வேற்று இடங்களிலிருந்து தான், சிங்களக் குடியேற்றவாசிகளை 'இறக்குமதி' செய்யவேண்டியேற்படும்.

பிரித்தானியர் செய்த வரலாற்று அநீதிக்காக. அப்பாவி மலையகத் தொழிலாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட வேண்டுமா?

முன்னர் மாவலித் திட்டங்கள் மூலம் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை (குறிப்பாக வெலிஓயா) செய்த அமைச்சரான காமினி திஸாநாயக்காவே தற்போது பெருந்தோட்டத் துறை அமைச்சராக இருக்கிறார் என்பது நினைவு கூரத்தக்கது.

## எதிர்கட்சிகளின் மனித உரிமை அமைப்பு

"மனித உரிமை மீறல்கள் இன்று கட்டுக்கடங்காத அளவு சென்று விட்டன. இனிமேலும் இவற்றை நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. இவற்றை கட்டுப்படுத்துவதற்குரிய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" எம். ஈ. பி. தலைவர் தினேஷ் குணவர்த்தன எதிர்க்கட்சிகள் உருவாக்கியுள்ள மனித உரிமை அமைப்புக்குரிய காரணம் பற்றிக் கேட்டபோது இவ்வாறு கூறினார். இந்த எதிர்க்கட்சிகளின் மனித உரிமை அமைப்பு 'மனித உரிமைக்கான நாடாளுமன்றத்தவர்' என்ற பேரில் இயங்குமென்றும் அவர் கூறினார்.

இதன் காரியதரிசியாக கேகாலை எம்.பி. தர்மசிறி சேனநாயக்காவும் உப தலைவர்களாக வாசுதேவ நாணயக்காராவும், நந்த எல்லாவல, கந்தையா நவரத்தினம், திரு (த. வி. கூ. அணி) இஸ்புல்லா ஆகியோர் இயங்குவர். அமைப்புக் காரியதரிசியாக மகிந்த ராஜபக்ஷவும், இதன் தலைவராக தினேஷ் குணவர்த்தனவும் உள்ளனர்.

## பேச்சு...

*(1ஆம் பக்கத்தொடர்ச்சி)*

தலைமையில் திரு. திலிப் யோகி, திரு. மூர்த்தி, திரு. லோரன்ஸ் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

இரு பகுதியினரையும் இணைக்கும் முக்கிய பிரமுகராக அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத் செயல்படுவதோடு அரசதரப்பின் முக்கிய பேச்சாளராகவும் இருப்பார் எனத்தெரிய வருகிறது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 13-5-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.